விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
(C-3075)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 18 திங்கட்கிழமை (02.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 195

## அரசியல் தீர்வுக்கு பூரண ஒத்துழைப்பு
### திஸ்ஸ விதாரண



(கொழும்பு)
நாட்டை பிளவடையச் செய்யாமல், அனைத்து மக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் தமிழ் மக்களுக்கான அரசியல் 23

## 500வது நாளை எட்டியது
### காணாமலாக்கப்பட்டோரின் போராட்டம்



02

## முதலமைச்சரை பதவி விலக சொல்வது கேலிக்கூத்தாகும்
### மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா

(வவுனியா)
முதலமைச்சரை பதவி விலகச் சொல்லுவது கேலிக்கூத்தான விடயமாகுமென வடக்குமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராஜா தெரிவித்துள்ளார்.
நேற்று வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இதனைத் தெரி 23

# வடக்கில் குற்றங்கள் அதிகரிப்பு; தடுக்க நடவடிக்கை எடுங்கள்!
## ஜனாதிபதியிடம் முதலமைச்சர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள குற்றவியல் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வடக்கு மாகாண முதலமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்.வாள்வெட்டு 2 இளைஞர் கைது!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் 2 இளைஞர்கள் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த 2 பேரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் 23

## மின்சார சபை உள்ளிட்ட நிறுவனங்கள் ரூபாய் 6700 கோடிகடன்

(கொழும்பு)
எரிபொருள் பெற்றுக்கொண்டதற்காக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனமும், இலங்கை மின்சார சபையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 6700 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட வேண்டியுள்ளதாக பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சின் செய 23

## கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட ஒருவரின் எச்சங்கள் ஒட்டுசுட்டானில் கண்டுபிடிப்பு

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தண்ணிமுறிப்பு குளத்தின் அலகரைப் பகுதியில் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்ட நிலையில் ஒருவரின் எஞ்சிய எச்சங்கள் நேற்று ஒட்டுசுட்டான் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது
கடந்த சித்திரை மாதம் நெடுங்கேணி சேனைப்பிலவு பகுதியினைச் சேர்ந்த 22 வயதான ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
இந்த கொலை தொடர்பில் நெடுங்கேணி சேனைப் 23


## ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே மாகாணசபைத் தேர்தலாம்!

(கொழும்பு)
ஆயுட்காலம் முடிவடைந்துள்ள மாகாணசபைகளின் தேர்தல்களை இந்த வருட இறுதிக்குள் நடத்தி விடவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு முனைப்புக்காட்டி வருகிறது.
எனினும், மாகாணசபை தேர்தல்களை சந்திக்க அரசாங்கம் தயாராகவில்லை என்ற தகவல்களே வெளிவருகின்றன. கடந்த உள்ளூராட்சி சபை தேர்தல்களை போன்று மீண்டும் ஒரு தோல்வியை சந்தித்து விடக்கூடாது என்பதும் தேர்தல்களை நடத்த போதிய நிதிவசதி இல்லை என்பதும் அரசாங்கத்தரப்பில் கூறப்படும் காரணங்களாக உள்ளன. 23

## கிளிநொச்சியில் மின்னல் தாக்கி ஒருவர் பலி

(கிளிநொச்சி)
கிளிநொச்சி சுண்டிகுளம் பிரதேச கடலோரப் பகுதியில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. 23

## பொல் பொட்டின் சகோதரர்கள் என்னை ஹிட்லரின் சகோதரர் என்கின்றனர்



(கொழும்பு)
சர்வாதிகார ஆட்சியொன்றை முன்னெடுத்ததாக தெரிவித்தும், பல்வேறு வகையிலும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும் வரும் இந்த நல்லாட்சியைச் சேர்ந்தவர்களுக்கு "பொல்பொட்" என்றபெயரையே ஞாபகப்படுத்த வேண்டி 24

## சீனாவிடம் கடன் பெற்றமை மகிந்தவின் இராஜதந்திரமே!
### கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கடன் நிறுவனங்களிடமிருந்து கடன் பெறாமல்சீனாவிடமிருந்து கடன்பெற்றமை ஒரு இராஜதந்திரமே என்று 24



## தரம் 1 க்கு 10ஆம் திகதிவரை விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)
அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் ஏற்றுக்கொள் 23

# பிராந்திய விமான நிலையமாக பலாலி; 10ம் திகதி அடிக்கல் நடுகிறார் பிரதமர்
### இந்தியத் தூதுவரும் பங்கேற்பார்

(கொழும்பு)
பலாலி விமான நிலையத்தை இந்தியாவின் உதவியுடன், பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கான அடிக்கல்லை பிரத



மர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை நட்டுவைப்பார் என பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதுவர் தரஞ்ஜித் சிங்கும் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வகிருஷ்ணன் கபிலன்

சிவப்பிரகாசம் ரஜினிகாந்த்

08.06.2018 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் 33ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டத்தையும் (M.A) 13.06.2018 அன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (PGDE) பட்டத்தையும் பெற்றுக் கொண்ட சிவப்பிரகாசம் ரஜினிகாந்த் (ஆசிரியர், கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை) அவர்களையும் 08.06.2018 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் 33ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி பட்டத்தை (M.A) பெற்றுக் கொண்ட செல்வகிருஷ்ணன் கபிலன் அவர்களையும் மனதார வாழ்த்துவதோடு அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

கூவில்,
புலோலி தென்மேற்கு, புலோலி

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்

(சி-3127)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




கடந்த 23.06.2018 அன்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் BRITISH COUNCIL நடாத்திய சர்வதேச பாடசாலை விருது வழங்கல் நிகழ்வில் எமது பாடசாலை ஆங்கில செயற்றிட்ட போட்டியில் ISA FULL AWARD விருதினைப் பெற்றதோடு வட மாகாணத்தில் BEST DOSSIER ஆகவும் தெரிவு செய்யப்பட்டு OUT STANDING DEVELOPMENT OF THE INTERNATIONAL DIMENSON IN THE CURRICULLUM என்ற விருதினையும் பெற்றுக் கொண்டுள்ளது.

மேலும் BRITISH COUNCIL SCHOOL AMBASSADOR AWARD விருதை ஆங்கில பாட ஆசிரியர் திருமதி சிவரூபி இராதாகிருஷ்ணா அவர்களும் பெற்றுக் கொண்டுள்ளார்.

விருதினைப் பெற்றுத் தந்து பாடசாலைக்கு கௌரவத்தை தேடித்தந்த திருமதி சி.இராதாகிருஷ்ணா (செயற்றிட்ட இணைப்பாளர்) செல்வி ஜோ.ஜொய்ஸ் மெரிலா (செயற்றிட்ட உதவி இணைப்பாளர்) அவர்களையும் உதவி புரிந்த ஏனைய ஆசிரியர்களையும் இவற்றுக்கு உறுதுணையாய் இருந்த அதிபர் திரு.வே.உதயமோகன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பல விருதுகளைப் பெற்றுக்கொள்ள வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம்

(4765)

## 500வது...

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தாண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் நேற்றுடன் 500ஆவது நாளை எட்டியுள்ளது.

500ஆவது நாளினை முன்னிட்டு, வடக்கு கிழக்கை சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்று சேர்ந்து கிளிநொச்சி கந்த சுவாமி ஆலய முன்றலில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.(மு)

(விரிவான செய்தி 8ஆம் பக்கத்தில்...)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணி, மரக்காலை அரிவு பட்டடை விற்பனை

கொடிகாமம் நகரில் இருந்து 500M தூரத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் GS ஒழுங்கையில், பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாக உள்ள பனை, தென்னை, வெட்டுக்கிணறுடன் கூடிய 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. அத்துடன் சிவதிரவியம் மரக்காலை சக்கரவாள், பாட்டுவாள், அதற்காக அமைக்கப்பட்ட கொட்டகைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-S.காண்டீபன்-41765712015 (viber) S.பத்மநாதன்-0779228931, S.ஆனந்தராசா-0774161041

(சி-3122)

## அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்புக்கான முடிவுகள்

மக்கள் நலன் காப்பகத்தால் நடாத்தப்பட்ட அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு குறிப்பிட்ட திகதியான 28.06.2018 அன்று மத்தியஸ்தர்கள் முன்னிலையில் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய முன்றலில் சீட்டிழுப்பு நடைபெற்றது. இச்சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிட்டை இலக்கங்கள் வருமாறு:-

1ம் பரிசுக்கான சிட்டை இல-56455
2ம் பரிசுக்கான சிட்டை இல-56302
3ம் பரிசுக்கான சிட்டை இல-56852

மேலும் 05 ஆறுதல் பரிசுகளுக்கான சிட்டை இலக்கங்கள் வருமாறு:-

1ஆவது ஆறுதல் பரிசுக்கான சிட்டை இல-24455
2ஆவது ஆறுதல் பரிசுக்கான சிட்டை இல-63329
3ஆவது ஆறுதல் பரிசுக்கான சிட்டை இல-61994
4ஆவது ஆறுதல் பரிசுக்கான சிட்டை இல-43931
5ஆவது ஆறுதல் பரிசுக்கான சிட்டை இல-53504

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சிட்டை இலக்கங்களுடைய வெற்றியாளர்கள் தம்மிடமுள்ள சிட்டைகளுடன் எதிர்வரும் 05.07.2018 திகதிக்கு முன்னர் மக்கள் நலன் காப்பகம் நடுவப்பணியகம் கரடிப் போக்கு சந்தி கிளிநொச்சியில் அமைந்துள்ள அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதோடு பின்னர் வரும் விபரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சு.சிவகுமார்
நிர்வாக இணைப்பாளர்,
மக்கள் நலன் காப்பகம்

(சி-3120)

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2018/07/01 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 3692 |

ஆங்கில எழுத்து: K — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 3 0 1 8 7 6

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2018-07-01 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 17 |

ஆங்கில எழுத்து: I — வெற்றி இலக்கங்கள்: 07 17 46 55

தேசிய லொத்தர் சபை

### நீரோகா

| | |
|---|---|
| திகதி | 2018/07/01 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 414 |

| லக்கினம | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இலக்கம் |
|---|---|---|---|---|---|
| மகரம் | 31 | 50 | 62 | 69 | 14 |

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.07.01 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1807 |

ஆங்கில எழுத்து: G — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 09 24 44 54

தேசிய லொத்தர் சபை

# மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

Congratulations

## திரு.சின்னத்துரை வேதவனம்

(பொதுமுகாமையாளர், முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்-புதுக்குடியிருப்பு)



1983ஆம் ஆண்டு தொடக்கம் கூட்டுறவுத் துறையில் பல பதவிகளூடாக சேவையாற்றி சுமார் 30ஆண்டுகள் தொடர்ந்து பொது முகாமையாளர் பதவியில் பணிபுரிந்து கூட்டுறவுத் துறையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டுமல்லாது வடக்கு மாகாணத்தில் கூட்டுறவுத்துறைசார் வேலைத்திட்டங்கள் பலவற்றை பொறுப்பேற்று நடத்தி வடக்கு மாகாணத்தின் கூட்டுறவு நெஞ்சங்களில் இடம் பிடித்து நிற்பவரும் இன்று அறுபது அகவையை பூர்த்தி செய்து இருப்பவருமான எமது மணிவிழா நாயகன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தை சிறப்பாக களிப்பதுடன் எமது கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கும் பொதுசேவை நோக்குடனும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:
வடக்கு மாகாணக் கூட்டுறவுக் குடும்ப சொந்தங்கள்

(4750)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழக்கைக் கேட்க உரித்தில்லை என்றால் இடைக்காலத்தடை பிறப்பிக்கவும் உரித்தில்லை

## முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**அரசியல் யாப்பு பற்றிய அர்த்த விளம்பலானது (Constitutional Interpretation) உச்ச நீதிமன்றத்தினாலேயே இயம்பப்பட வேண்டும். மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இவ் வழக்கைக் கேட்க உரித்தில்லை என்றால் இடைக்காலத் தடைக்கட்டளை பிறப்பிக்கவும் உரித்தில்லை எனத் தெரிவித்த வடக்குமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், நீதிமன்றத்தினுடைய தீர்மானத்தின் பிரதி வராமல் எதுவும் கூறமுடியாது எனவும் தெரிவித்துள்ளார்.**



டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு பற்றி பலரும் பலவிதமாகப் பேசுகின்றார்கள். சுருக்கமாக அதைப் பற்றிக் கூறமுடியுமா? என வாராந்த கேள்வி பதிலில் கேட்டபோது மேற்கண்டவாறு முதலமைச்சர் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

மற்றவை மத்தியில் பின்வரும் நிவாரணம் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் டெனீஸ்வரனால் வழக்குப் பதியப்பட்டது. அதாவது அரசியல் யாப்பின் உறுப்புரை 154 F (5) இன் பிரகாரம் நியமிக்கப்பட்ட அமைச்சர் ஒருவரை ஒரு மாகாணசபையின் முதலமைச்சருக்கு பதவி நீக்கம் செய்ய முடியுமா அல்லது அவ்வுரித்து அவரின் தற்துணிவுக்கு அமைய ஆளுநர் வசம் கையளிக்கப்பட்டுள்ளதா? என்பதே அவரின் கேள்வி.

வழக்கு வடமாகாண சபை முதலமைச்சரை 1ஆம் எதிர்வாதியாகவும் 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் எதிர்வாதிகளாகத் தற்போதைய அமைச்சர்களையும் ஆறாவது எதிர்வாதியாக முன்னைய சுகாதார அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கத்தையும் ஏழாவது எதிர்வாதியாக வடமாகாண ஆளுநரையும் குறிப்பிட்டு அவரின் வழக்கு பதியப்பட்டது.

முன்னைய மூன்று அமைச்சர்களும் எதிர்வாதிகள் ஆக்கப்படாது வைத்தியர் சத்தியலிங்கம் மட்டுமே எதிர்வாதி ஆக்கப்பட்டிருந்தார். முதலாம் எதிர்வாதியாகிய முதலமைச்சர் சார்பில் தெரிபட்ட சட்டத்தரணிகளால்



மூன்று பூர்வாங்க ஆட்சேபணைகள் எடுக்கப்பட்டிருந்தன.

அவையாவன.

ஒன்று, அரசியல் யாப்பின் படி உறுப்புரை 154F(5) பற்றிய அர்த்தம் விளம்பலானது உறுப்புரை 125 இன் படி உச்ச நீதிமன்றத்தினாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது. இரண்டாவதாக விண்ணப்பத்துடன் பதியப்பட்ட சான்றாவணங்கள் அனைத்தும் (இரண்டைத் தவிர) முதலாவணங்களாக அமையாதிருந்தமை 1990 ஆம் ஆண்டு வெளிவந்த மேன்முறையீட்டு நீதிமன்ற (மேன்முறையீடு நடவடிக்கை சம்பந்தமான) விதிகளில் காணப்படும் 3(1) விதியின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைந்துள்ளமை.

மூன்றாவதாக வழக்கின் விடய வஸ்துவுக்கு தேவைப்படாத முன்னைய அமைச்சருள் ஒருவரை 6 ஆம் எதிர்வாதியாக உள்நுழைத்தமை சட்டத்திற்குப் புறம்பானது. வழக்கிற்கு அத்தியாவசியமான கட்சிக்காரராக சட்டம் ஏற்கும் நபர்களுள் 6ஆம் எதிர்வாதி அடங்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இவற்றைப் பரிசீலிக்கப் புகுந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் பூர்வாங்க விசாரணையின் இறுதியில் சில இடைக்காலக் கட்டளைகளைப் பிறப்பித்துள்ளதாக அறியப்படுகிறது.

முதலாவது பூர்வாங்க ஆட்சேபனைக்குப் பதில் இறுத்த பின்னர் தான் இக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டனவோ நாம் அறியோம். மேன்முறையீட்டு நீதி மன்றத்துக்கு இவ் வழக்கைக் கேட்க உரித்தில்லை என்றால் இடைக்காலத் தடைக் கட்டளை பிறப்பிக்கவும் உரித்தில்லை என்றாகிறது.

ஆகவே முதலாவது பூர்வாங்க ஆட்சேபனைக்கு தமக்கு உரித்து இருக்கின்றது என்று விடையளித்த பின்பே இடைக்காலத் தடைக்கட்டளையைப் பிறப்பிக்க முடியும்.

அவை பற்றி முழுமையாக அறிய மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்மானத்தின் பிரதி பெற வேண்டும். இதுவரையில் அது பெறப்படவில்லை. பிரதி பெற்ற பின்னரே மன்றின் தீர்மானம் பற்றிக் கூறலாம்.

ஆனால் எமது பூர்வாங்க ஆட்சேபனைகள் பற்றி சுருக்கமாகக் கூறலாம்.

முதலாவது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் இம்மனுவின் விடயவஸ்து அடங்காதென்பது அரசியல் யாப்பு பற்றிய அர்த்த விளம்பலானது (Constitutional Interpretation) உச்ச நீதிமன்றத்தினாலேயே இயம்பப்பட வேண்டும் (உறுப்புரை 125). ஆகவே இம் மனுவைக் கேட்கும் அதிகாரத்தை மேன்முறையீட்டு நீதிமன்றம் உடையதல்ல.

அமைச்சர்களை நியமிக்கும் மற்றும் பதவி இறக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கா ஆளுநருக்கா உண்டு என்பது அரசியல் யாப்பின் ஏற்பாடுகளின் கீழ் அர்த்த விளம்பல் வெளிப்படுத்தும் செயல். அதை மேன்முறையீட்டு நீதிமன்றம் அரசியல் யாப்பின் உறுப்புரை 125ன் கீழ் செய்ய முடியாது. மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வாட்சேபனைக்குப் பதில் தராது இடைக்கால நிவாரணங்களை வழங்கியிருந்தால் அது தவறாகவே அமையும்.

அடுத்து இவ் வழக்கில் பல கசெற்றுக்கள் (Gazettes) குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் முறையான அசல் பிரதிகள் தாக்கல் செய்யப்படவில்லை. இது நடைமுறை விதிகளுக்கு முரணாக அமைகின்றது. சான்றாவணங்களின் அசல் பிரதிகள் கட்டாயமாகப் பதியப்பட வேண்டும். காரணம் வாய்மூலச் சாட்சியம் இல்லாது பொதுவாக ஆவணங்களை முன்வைத்தே இவ்வாறான உறுதிகேள்.பேராணைகள் மற்றும் தடுப்புப் பேராணைகள் ஆகியன வழங்கப்படுகின்றன. எனவே ஆவணங்கள் அசலாக இருக்க வேண்டும்.

மூன்றாவது இவ் வழக்கின் முக்கிய விடய வஸ்துவுக்கு தொடர்பில்லாத முன்னை நாள் சுகாதார அமைச்சரை இவ் வழக்கில் உள்ளடக்கியமை ஒரு குறிப்பிட்ட சட்டத்தரணி அவர் சார்பில் உள்நுழைய வழி அமைத்துக் கொடுப்பதற்கே என்றுங் கூறலாம்.

விண்ணப்பதாரரின் வழக்கின் விடய வஸ்துவுக்கு பக்கபலம் சேர்ப்பதற்காக 6 ஆம் எதிர்வாதியும் அவர்தம் சட்டத்தரணியும் அழைக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் சம்பந்தமில்லாதவர்களை விண்ணப்பத்தில் கட்சிக்காரராக உள்நுழைப்பதை சட்டம் தடுக்கின்றது. அவ்வாறானவர்கள் "ஆரவாரிப்புக் கட்சிக்காரர்கள்" என்று அழைக்கப்படுவார்கள் (Cheer Parties).

ஆகவே 6 ஆம் எதிர்வாதியின் பெயரை உள்நுழைத்தமை தவறு என்று கூறி அவரின் பெயரை நீக்குமாறு கோரப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தின் அடிப்படை அந்தஸ்தே கேள்விக்கிடமாக்கப்பட்டிருக்கும் போது அந்த ஆட்சேபனைக்கு விடையளிக்காமல் தமக்கு அந்தஸ்து இருப்பது போல் இடைக்காலத் தடைக்கட்டளையை பிறப்பிப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு வேளை தமக்கு உரித்துண்டு என்று தீர்மானம் எடுத்த பின்னரே இந்தத் தடைக்கட்டளை வழங்கப்பட்டதோ நாம் அறியோம்.

ஆகவே தான் தீர்மானத்தின் பிரதி வராமல் எதுவும் கூறமுடியாது இருக்கின்றது என மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# அரசாங்கத்தின் நிலையற்ற கொள்கையே பொருளாதார நெருக்கடிக்குக்காரணம்



(கொழும்பு)

அரசாங்கத்தின் கவனயீனமும் நிலையான கொள்கையின்மையுமே தற்போது நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு காரணம் என தேசப்பற்றுள்ள வல்லுநர்கள் இயக்கத்தின் உறுப்பினர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

மாத்தளையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் கவனயீனமும் நிலையான கொள்கையின்மையுமே நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்குக் காரணம். கடந்த அரசாங்கத்தில் நிர்மாண பணிகளுக்கென செலவிடப்பட்ட தொகையினை விட இந்த அரசாங்கத்தின் முறையற்ற முகாமைத்துவம் காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

மேலும் 2000 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் தேசிய கொள்கைகளையும் சமூக கொள்கைகளையும் தமது ஆட்சிக் கொள்கைகளாக கொண்டு தமது அரசாங்கத்தை கொண்டு சென்றனர். இருப்பினும் 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் கொள்கைகள் எதுவுமின்றி ஆட்சியினை மேற்கொண்டு வருகின்றது.

எனவே நாட்டை மீண்டும் அபிவிருத்தி என்ற ரீதியில் கட்டியெழுப்ப வேண்டுமாயின் கொள்கையற்ற தேசிய அரசாங்கத்தினை ஒழித்த முறையான நிலைபேறான அபிவிருத்தியினை தோற்றுவிக்கக்கூடிய அரசை உருவாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியக்க வைத்தார் கவானி: உயர... உயர... உருகுவே

## கிறிஸ்ரியானோ றொனால்டோவின் போர்த்துக்கல் ஏமாற்றம்


கோலடித்த மகிழ்ச்சியில் எகிறிக் குதிக்கும் கவானி

**முதன் முறை**

உருகுவே அணி, உலக கிண்ண கால்பந்து அரங்கில் முதன் முறையாக, முதல் நான்கு போட்டிகளில் (3 லீக், ஒரு 'ரவுண்ட் 16') வெற்றி பெற்றுள்ளது.

உலக கிண்ண கால் பந்து தொடரில் முன்னணி அணிகள் வெளியேறி அதிர்ச்சி அளிக்கின்றன. 'நடப்பு சம்பியன்' ஜேரமனி, ஆர்ஜென்ரீனாவை தொடர்ந்து போர்த்துக்கலும் நடையைக் கட்டியது. 'ரவுண்ட் 16' போட்டியில் உருகுவேயிடம் வீழ்ந்தது.

இதனையடுத்து கிறிஸ்ரியானோ றொனால்டோவின் உலக கிண்ணம் வெல்லும் கனவு முடிவுக்கு வந்தது. உருகுவே சார்பில் கவானி இரண்டு கோல் அடித்து அசத்தினார்.

ரஷ்யாவில், 21ஆவது 'பிபா' உலக கிண்ண கால் பந்து தொடர் நடக்கிறது. சோச்சி நகரில் நடந்த 'ரவுண்ட் 16' சுற்றுப் போட்டியில் உலகின் 'நம்பர் 4' போர்த்துக்கல் அணி, 14ஆவது இடத்தில் உள்ள உருகுவே அணியை எதிர்கொண்டது.

ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் பெர்னார்டோ சில்வா 'பாஸ்' செய்த பந்தை அணித் தலைவர் கிறிஸ்ரியானோ றொனால்டோ கோலாக்க முயற்சித்தார். ஆனால் உருகுவே கோல்காப்பாளர் பெர்ணான்டோ முஸ்லெரா பந்தை பிடிக்க, போர்த்துக்கலின் கோல் வாய்ப்பு பறிபோனது.

இந்நிலையில் 7ஆவது நிமிடத்தில் உருகுவேயின் லூயிஸ் சாரஸ் தூக்கி அடித்த பந்தை கவானி தலையால் முட்டி முதல் கோல் அடித்தார். பின், 22ஆவது நிமிடத்தில் உருகுவே அணிக்கு கிடைத்த 'பிரீ கிக்' வாய்ப்பில் லூயிஸ் சாரஸ் அடித்த பந்தை போர்த்துக்கல் கோல்காப்பாளர் ருய் பாட்ரிசியோ தடுத்தார்.

தொடர்ந்து போராடிய போர்த்துக்கல் அணியினரால் உருகுவே அணிக்கு பதிலடி கொடுக்க முடியவில்லை. முதல் பாதி முடிவில் உருகுவே அணி 1-0 என முன்னிலை வகித்தது.

### கவானி கலக்கல்

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட போர்த்துக்கல் அணிக்கு 55ஆவது நிமிடத்தில் நல்ல பலன் கிடைத்தது. ரபேல் குரேரிரோ தூக்கி அடித்த பந்தை பெபே தலையால் முட்டி கோலடிக்க, 1-1 என சமநிலை அடைந்தது.

இதன்மூலம் இந்த ஆண்டு தொடர்ச்சியாக 6 போட்டிகளில் எதிரணிக்கு ஒரு கோல் கூட விட்டுக் கொடுக்காமல் இருந்த உருகுவே அணியின் சிறப்பான செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.



இந்நிலையில் 62ஆவது நிமிடத்தில் உருகுவே கோல்காப்பாளர் முஸ்லெரா தூக்கி அடித்த பந்தை பெற்ற றொட்ரிகோ பென்டன்கர், கவானியிடம் 'பாஸ்' செய்தார். சிறிதும் தாமதிக்காத கவானி, பந்தை அப்படியே கோல் வலைக்குள் தள்ளி 2 ஆவது கோலடித்தார்.

ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணிக்கு கோலடிக்க நல்ல வாய்ப்பு கிடைத்தது. உருகுவே கோல்காப்பாளர் முஸ்லெரா நழுவவிட்ட பந்தை போர்த்துக்கலின் பெர்னார்டோ சில்வா 'கோல் போஸ்டடுக்கு' மேலே தூக்கி அடித்து வீணடித்தார். இதேபோல 'ஸ்டாப்பேஜ்' (90+4வது நிமிடம்) போர்த்துக்கலின் ரிகார்டோ குவாரேஸ்மா தூக்கி அடித்த பந்தை உருகுவே கோல்காப்பாளர் முஸ்லெரா சாமர்த்தியமாக பிடித்தார்.

### பிரான்ஸ் மோதல்

ஆட்டநேர முடிவில் உருகுவே அணி 2-1 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. எதிர்வரும் 6ஆம் திதகி நடக்கவுள்ள காலிறுதியில் உருகுவே - பிரான்ஸ் அணிகள் மோதுகின்றன.

### பெருந்தன்மை

போட்டியின் 74ஆவது நிமிடத்தில் உருகுவேயின் கவானி காயமடைந்தார். அதன்போது ஆடுகளத்தை விட்டு வெளியேறிய இவருக்கு, போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ றொனால்டோ உதவி செய்தார். விளையாட்டு உணர்வுடன் நடந்து கொண்ட றொனால்டோவுக்கு மைதானத்தில் இருந்த ரசிகர்கள் மட்டுமின்றி சமூக வலை தளங்களிலும் பாராட்டுக்கள் குவிகின்றன.

### ஓய்வு எப்போது?

உலக கிண்ணத் தொடரில் 'ரவுண்ட் 16' சுற்றோடு திரும்பிய போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ றொனால்டோ, விரைவில் ஓய்வை அறிவிப்பாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து றொனால்டோ கூறுகையில், "வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் ஓய்வு குறித்து பேசுவதற்கு இது சரியான நேரம் கிடையாது. இளம் மற்றும் அனுபவம் வாய்ந்த வீரர்களுடன் எங்கள் அணி இன்னும் பலமாகவே உள்ளது," என்றார்.

---

# பெனால்டியில் ஸ்பெய்ன் 'பெய்ன்'

## காலிறுதியில் ரஷ்யா


தோல்வியில் துவண்ட ஸ்பெய்ன்

உலக கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதிக்கு முதன் முறையாக முன்னேறியது ரஷ்யா. நேற்று நடந்த 'ரவுண்ட் 16' போட்டியில் பெனால்டி ஷூட் அவுட் முறையில் 4-3 என ஸ்பெயினை வீழ்த்தியது. இதனால் ஸ்பெயின் ரசிகர்கள் தோல்வி தந்த வலியால் ('பெயின்') தவித்தனர்.

ரஷ்யாவில் 21ஆவது உலக கிண்ண தொடர் நடக்கிறது. இதன் 'ரவுண்ட் 16' போட்டியில் நேற்று 'நம்பர் 10' இடத்தில் உள்ள ஸ்பெயின், 70ஆவது இடத்தில் இருக்கும் ரஷ்யாவை சந்தித்தது. 11ஆவது நிமிடம் ஸ்பெயினுக்கு 'பிரீ கிக்' கிடைத்தது.

இதை அசென்சியோ ரஷ்ய கோல் போஸ்ட் நோக்கி அடித்தார். அப்போது அருகில் இருந்த ஸ்பெயின் அணித் தலைவர் ராமோஸை தள்ளி விட்டார் செர்ஜி இக்னஷிவிச். துரதிர்ஷ்டவசமாக இவரது காலில் பட்டு உள்ளே செல்ல 'சேம் சைட்' கோலானது. இதனால் ஸ்பெயின் அணி 1-0 என முன்னிலை பெற்றது.

41ஆவது நிமிடம் 'கோர்னர் கக்கில்' கிடைத்த பந்தை சமதேவ் தலையில் அடித்து கோலாக்க முயன்றார். பந்து அருகில் இருந்த ஜெரார்ட் பிக்கே (ஸ்பெயின்) கையில் பட்டதால், ரஷ்யாவுக்கு 'பெனால்டி' கிடைத்தது. இதில் டிஜூபா கோல் அடிக்க ஸ்கோர 1-1 என சமன் ஆனது.

### அதிக 'பாஸ்'

போட்டி நேரத்தில் 845 முறை ஸ்பெயின் வீரர்கள் பாஸ்செய்தபோதும (ரஷ்யா 227) ஸ்பெயின் ஒரு கோல் கூட அடிக்கவில்லை. ஆட்ட முடிவில் (90 நிமிடம்) ஸ்கோர் 1-1 என முடிய, போட்டி கூடுதல் நேரத்துக்கு (30 நிமிடம்) சென்றது.

### கூடுதல் நேரம்

தலா 15 நிமிடங்கள் கொண்ட இதன் முதற்பாதியில் அசென்சியோ (90+10வது), பிக்கே (90+15வது) அடித்த பந்துகளை ரஷ்ய கோல் காப்பாளர் அகின்பீவ் சிறப்பாக தடுக்க ஸ்கோர் 1-1 என நீடித்தது. தொடர்ந்து ரஷ்ய கோல் காப்பாளர் அகின்பீவ் அரணாக நின்று தடுக்க, கூடுதல் நேரத்திலும் ஆட்டம் சமன் (1-1) ஆனது.

### 'திரில்' வெற்றி:

வெற்றியாளரை முடிவு செய்ய போட்டி 'பெனால்டி ஷூட்' அவுட்டுக்கு சென்றது. இரு அணிக்கும் தலா 5 வாய்ப்பு தரப்படும். இதில் அதிக கோல் அடிக்கும் அணி வெற்றி பெறும்.

▶ **முதல் வாய்ப்பு:** இனியஸ்டா (ஸ்பெயின்), ஸ்மோலவ் (ரஷ்யா) கோல் அடித்தனர் (1-1).

▶ **2ஆவது வாய்ப்பு:** பிக்கே (ஸ்பெயின்), செர்ஜி இக்னஷிவிச் (ரஷ்யா) கோல் அடித்தனர் (2-2).

▶ **3ஆவது வாய்ப்பு** கோகே (ஸ்பெயின்) வலது புறம் அடித்த பந்தை கோல் காப்பாளர் அகின்பீவ் தடுத்தார். கோலோவின் (ரஷ்யா) கோல் அடித்து 2-3 என முந்தியது ரஷ்யா.

▶ **4ஆவது வாய்ப்பு** ராமோஸ் (ஸ்பெயின்), செர்ரிஷேவ் (ரஷ்யா) கோல் அடித்தனர் (3-4).

▶ **5ஆவது வாய்ப்பு** இயாகோ அஸ்பாஸ் (ஸ்பெயின்) அடித்த பந்து அகின் பீவ் இது காலில பட்டு வெளியே சென்றது. இதனால், 5வது வாய்ப்பை பயன்படுத்தாமல், ரஷ்யா 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. உலக கிண்ணத் தொடரின் காலிறுதிக்கு முதன் முறையாக முன்னேறியது ரஷ்யா.

### சொந்த மண் சாதகம்

உலக கிண்ணத்தொடரை நடத்தும் அணிகளை 'நொக் அவுட்', சுற்றில் ஸ்பெயின் அணி வீழ்த்தியது இல்லை. 1934ல் இத்தாலி (காலிறுதி, கூடுதல் நேரம், 0-1), 1950ல் பிரேசில் (இறுதிச் சுற்று, 1-6), 2002ல் தென் கொரியா (காலிறுதி, கூடுதல் நேரம், 3-5), தற்போது ரஷ்யாவிடம் ('ரவுண்ட் 16', கூடுதல் நேரம் 3-4) வீழ்ந்தது.

### சீனியர் வீரர்

உலக கிண்ணத் தொடரில் 'சேம் சைட்' கோல் அடித்த 'சீனியர்' வீரரானார் ரஷ்யாவின் செர்ஜி இக்னஷிவிச் (38 வயது, 352 நாட்கள்). இதற்கு முன் 37 வயது, 43ஆவது நாளில் நோயல் வல்லாடேர்ஸ் (ஹொண்டுரஸ்) முதலிடத்தில் (எதிர் - பிரான்ஸ், 2014) இருந்தார்.


வெற்றிக் களிப்பில் மிதக்கும் ரஷ்யா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நியூயோர்க் ரைம்ஸ் செய்தி ஒரு அரசியல் சூழ்ச்சி எல்லா குற்றச்சாட்டுக்களையும் நிராகரிக்கிறேன்

## மௌனம் கலைத்தார் மகிந்த இந்திய ஊடகங்கள் செய்தி



(கொழும்பு)

அமெரிக்காவின் முன்னணி நாளிதழ்களில் ஒன்றான நியூயோர்க் ரைம்ஸ் அண்மையில் வெளியிட்ட செய்திக்கட்டுரை ஒரு அரசியல் சூழ்ச்சி எனவும் இதில் முன்வைக்கப்பட்டுள்ள எல்லாக் குற்றச்சாட்டுகளையும் நான் நிராகரிக்கிறேன் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மேலும், இச்செய்திக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டநடவடிக்கைகள் தொடர்பாக தனது சட்டத்தரணிகளிடம் சட்ட ஆலோசனைகளை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதேவேளை, மகிந்த ராஜபக்ஷவின் மறுப்பு தொடர்பில் இந்திய ஊடகங்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன.

தமிழகத்தைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகங்களில் வெளியான செய்திகளில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கையில் கடந்த 2015 ஆம்ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சீன நிறுவனத்திடம் நன்கொடை பெற்றதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கு ராஜ பக்ஷ விளக்கம் அளித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது சீனாவிலுள்ள பிரபல நிறுவனத்திடம் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 76 இலட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக பெற்றதாக அமெரிக்காவின் பிரபல நாளிதழான நியூயோர்க் ரைம்ஸ் அண்மையில் கட்டுரை ஒன்றை வெளியிட்டது.

இது தொடர்பாக, பதிலளிக்காமல் மௌனம் காத்து வந்த ராஜபக்ஷ தற்போது விளக்கமளித்துள்ளார். அந்த கட்டுரையில் காணப்படும் தகவல்கள் முற்றிலும் தவறானவை, ஆதாரமற்றவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவிடம் இலங்கை முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ காட்டிவந்த நெருக்கம் தொடர்பாக இந்தியா முன்னர் கவலை கொண்டிருந்ததாகவும், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா இராணுவ தேவைகளுக்காகப் பயன்படுத்தி கொள்ளக்கூடும் என அச்சம் தெரிவித்திருந்ததாகவும் அந்த கட்டுரையாளர் சுட்டிக்காட்டியுள்ளதையும் ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

சீனாவுடனான இலங்கையின் நெருக்கம் தொடர்பாக இந்தியாவை ஆட்சி செய்த முன்னாள் காங்கிரஸ் அரசுக்கு அளித்திருந்த வாக்குறுதிகளை நான் எப்போதுமே மீறியதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அமெரிக்க நாளிதழ் வெளியிட்டுள்ள இந்த பரபரப்பு குற்றச்சாட்டு தொடர்பாக இலங்கை பொருளாதார குற்றப்பிரிவு பொலிஸார் விரைவில் விசாரணைக்கு தயாராகி வருவதாக தெரிய வருகிறது" என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

## குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திடம் பணம் பெற்றதாக நான் எங்கும் கூறவில்லை

### பிரதியமைச்சர் ரஞ்சன் தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளர் மரியா அபி ஹபீப் குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திடம் இருந்து பணம் பெற்றதாக நான் எந்த சந்தர்ப்பத்திலும் கூறவில்லை என பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையின் ஊடகவியலாளரின் டுவிட்டர் பதிவு தொடர்பில் பிரதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் செலவுக்காக 7.6 மில்லியன் டொலர் நிதியை சைனா ஹாபர் நிறுவனத்திற்கு சொந்தமான தனியார் வங்கி கணக்கில் இருந்து பெற்றதாக கடந்த 26 ஆம் திகதி நியூ யோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது.

கடந்த 29 ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது தான் குறித்த ஊடகவியலாளருடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதாக பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த ஊடகவியலாளர், பிரதி அமைச்சருடன் தான் தொலைபேசியில் உரையாடியதை அவர் வேறுவிதமாக தெரிவிப்பதாக நேற்று முன்தினம் அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

அத்துடன் தனது பத்திரிகை நிறுவனத்திடம் தவிர்ந்து வேறு யாரிடமும் குறித்த செய்தி தொடர்பில் தகவல்களை வழங்கவில்லை எனவும் அவர் குறித்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையில் குறித்த ஊடகவியலாளரின் கருத்து தொடர்பில் பிரதி அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது தான் குறித்த ஊடகவியலாளருடன் கலந்துரையாடியதாகவும் அதனைத் தவிர வேறு எதையும் தெரிவிக்க முடியாது எனவும் அவர் ரஞ்சன் தெரிவித்துள்ளார். (இ)


**நம்பிக்கை இழக்க வேண்டாம்.**

**உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.**

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)



**விற்பனையாகிறது**

**தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு**




**பூமாலை**

15 ஆசிரியர்களின் 15 மாதிரி வினாத்தாள்கள்

யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் 077 6258778

(அ-3083)


## இராசி பலன்

**மீனம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல படியாக நடைபெறலாம்.

**மேடம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், அந்நியர்களின் உதவி கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும் நாள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், விரயங்கள் கூடும், இறை வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கடகம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துக் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், மருத்துவச் செல்வுகள் ஏற்படலாம்.

**மகரம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| | இராசி பலன் | | சுக். ராகு. புத |
| கேது, செவ். சந் | | | |
| சனி | | குரு | |

சந்திராஷ்டமம்
புனர்பூசம், பூசம்
காலை 10.12 மணிக்கு
கும்-சந்

02.07.2018
ஆனி 18, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தி மாலை 6.12 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 10.58 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை
மடுமாதா திருநாள்

வளவன்

**தனுசு:** பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், செய்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**துலாம்:** வளர்ச்சி கூடும் நாள், எதிர்காலத்தில் சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், பிறருக்கு உதவ முற்படுவீர்கள்.

**கன்னி:** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், மறைமுகப் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று சிறப்புமிக்க பஞ்சஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய இராஜகோபுர பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்:ஜ.சிவசாந்தன்)

# எம்மை வெளியேற்ற முயற்சித்தால் வீதியில் இறங்கிப் போராடுவோம்

## யாழ்.நகர் அங்காடி வியாபாரிகள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாநகரசபையின் அனுமதியுடனேயே வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம் என தெரிவித்த யாழ் நகர் போக்குவரத்து சபை வளாக அங்காடி வியாபாரிகள் சங்கத்தினர்,சட்டவிரோத கடைகள் என தெரிவித்து எம்மை அகற்ற முற்பட்டால் வீதியில் இறங்கிப் போராடுவோம் என எச்சரித்துள்ளனர்.

யாழ்.பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள சட்டவிரோத கடைகள் அகற்றப்படும் என யாழ்.மாநகரசபை முதல்வர் அண்மையில் அறிவித்திருந்தார். குறித்த அறிவிப்புக்கு பதிலளிக்கும்வகையில் மேற்குறித்த சங்கத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

நாம் மத்திய பேருந்து தரிப்பு நிலை வளாகத்தில் கடந்த 2011 ஆம் ஆண்டில் இருந்து மாநகரசபையின் அனுமதியுடன் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். மொத்தமாக 68 கடைகள் உள்ளன. நாளாந்தம் ஒரு கடைக்கு வாடகையாக 200 ரூபாவும் 2016 ஆம் ஆண்டில் இருந்து இ.போ.சபையினருக்குவாடகை பணமாக ஒரு கடைக்கு 200 ரூபாவும். மொத்தமாக நாளாந்தம் 400 ரூபாய் செலுத்தி வந்தோம்.

2016 ஆம் ஆண்டு 6 ஆம் மாதத்தில் இருந்து நாம் மாநகரசபைக்கு செலுத்தும் வாடகைப்பணம் அப்போதைய மாநகரசபை ஆணையாளரால் நிறுத்தப்பட்டது. நாம் வியாபாரம் ஆரம்பித்து 7 ஆண்டுகள் கடந்த நிலையில் மாநகர ஆணையாளரால் எமக்கு எந்த விதமான இடையூறுகளும் ஏற்படவில்லை. மாறாக எமது வாக்குகளால் நாம் தெரிவு செய்து அனுப்பிய மாநகர முதல்வர் எமது வாழ்வாதாரத்தில் தனது பலத்தை பிரயோகிக்க முயற்சி செய்வதுவேதனையாக உள்ளது.

பல்வேறு இன்னல்களின் மத்தியில்தான் நாம் இந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு எமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்தி வருகிறோம். அண்மையில் இது தொடர்பாக மாநகர முதல்வரை சந்தித்து கதைத்த போதும் அவர் உரிய பதிலை எமக்கு தரவில்லை. எம்மை வெளியேற்ற முயற்சித்தால் எமது குடும்பங்களுடன் வீதியில் இறங்கிப்போராடுவதை தவிர வேறு வழி எமக்கு இல்லை. நாம் அனுமதி பெறாமலோ வாடகை செலுத்தாமலோ வியாபாரம் நடத்தவில்லை. ஆனால் தற்போது சட்டவிரோத கடைகள் என பெயர் சூட்டியுள்ளார்கள்.

எனவே எமது வாழ்வாதாரத்தை பாதிக்காது உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மேற்கொண்டு உதவி செய்ய வேண்டும்என வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-9)




# வைத்தியர் அம்பிகைபாகன் சிலையடி அலங்கரிப்பு



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்பாக அமைந்துள்ள வைத்தியர் அம்பிகைபாகனின் திருவுருவச் சிலையினை சூழவுள்ள பகுதி தொழிலதிபர் வை.சிவராசாவால் அவரது சொந்த செலவில் அலங்கரிக்கப்பட்டு வருகிறது.

குறித்த பகுதியைச் சூழ பூஞ்செடிகள் வைத்து பராமரிப்பதுடன், சூழவுள்ள பாதுகாப்பு கம்பிகளுக்கும் வர்ணம் பூசும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தன்னால் வைத்தியர் அம்பிகைபாகனின் திருவுருவச் சிலை மற்றும் சூழவுள்ள பகுதி தொடர்ச்சியாக பராமரிக்கப்படும் என தொழிலதிபர் வை.சிவராசா தெரிவித்துள்ளார். வைத்தியர் அம்பிகைபாகனின் திருவுருவச்சிலை 2016 இல் தொழிலதிபர் சிவராசாவின் நிதிப்பங்களிப்புடன் அமையப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# மாசேரி கிராமத்தில் அபிவிருத்திக்கூட்டம்

(வரணி)

வரணி மாசேரி கிராம உத்தியோகத்தர் பிரிவில் மேற்கொள்ள வேண்டிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் நேற்று முன்தினம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் மாசேரி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் க.விஜயகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் வாமதேவன் மற்றும் வட்டார பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர், சங்க நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கிராமத்தில் மேற்கொள்ள வேண்டிய வீதி திருத்தம், வீதி மின்விளக்கு பொருத்துதல், குடிநீர்ப் பிரச்சினை மற்றும் மயான அபிவிருத்தி, சனசமூக நிலைய அபிவிருத்தி போன்ற பல பிரச்சினைகளை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தவிசாளரிடம் எடுத்துக் கூறினர். இதனை கவனமாக செவிமடுத்த தவிசாளர் குடிநீர்ப் பிரச்சினைக்கு உரிய தீர்வை அடுத்த கிழமைக்குள் பெற்றுத் தருவதாகவும் ஏனைய அபிவிருத்தி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டு தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்துள்ளார். மக்களின் வேண்டுகோளை ஏற்று நேரடியாக கிராமத்திற்கு வந்து பிரச்சினைகளை கேட்டறிந்த தவிசாளருக்கும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் கிராம மக்கள் நன்றியைத் தெரிவித்துள்ளனர். (இ-103)




நவாலி சென் பீற்றர் தேவாலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி, பூசை வழிபாடுகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆலய பங்குத் தந்தை தலைமையில் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: ஈச்சமோட்டை செய்தியாளர்)

# மாணவர் பாராளுமன்ற அமர்வு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் மாணவர்பாராளுமன்ற அமர்வு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மாணவர்பாராளுமன்ற செயலாளர் நாயகம் செல்லையா இளங்கோ தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதித் தேர்தல் ஆணையாளர் தனபாலசிங்கம் அகிலன், சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் தங்கவேலு பாலராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)



கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.கல்லூரி அதிபர் எம். கனகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்ரீ.சற்குணராஜா, சிறப்பு வைத்திய அதிகாரி கே.சிவசுதன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ். தயாரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று 19ஆம் அகவையில்

# கடந்த 18 ஆண்டுகளில்

அழுத்தமான
காலடிகளை
எடுத்து வைக்கும்
நாம்,
இவ்வேளையில்
வடக்கின்
தனிப்பெரும்
அச்சகதாரர்களாக
எம்மை
வளர்த்தெடுக்க
உதவிய
பணியாளர்கள்,
வாடிக்கையாளர்கள்,
நலன் விரும்பிகள்
அனைவருக்கும்
எம்
நெஞ்சம் நிறைந்த
நன்றிகளைக்
காணிக்கை
ஆக்குகிறோம்.

எமது கலைக்களஞ்சியமான
அச்சகப் பாசறையில்
அச்சு ஊடக வல்லுநர்களாக
பயிற்றுவிக்கப்பட்ட
நம் பணியாளர்களே
இன்று வடக்கின்
அச்சு ஊடகங்கள் தோறும்
பணியாற்றுவது மட்டுமன்றி
புதிய அச்சு ஊடகங்களையும்
உருவாக்கியுள்ளார்கள்
என்பதையிட்டு பெருமகிழ்வுறும்
நாம் தொடர்ந்தும் சர்வதேச
பயிற்றுவிப்பாளர்களால்
அச்சகப் பணியாளர்களின்
தொழில்திறனை விருத்தி செய்து
சர்வதேச ரீதியில்
தடம் பதித்து அச்சுக் கலையை
மேன்மேலும்
வளர்த்தெடுப்போம் என
இந்நன்னாளில்
உறுதி கூறுகிறோம்.

**விழ விழ எழுவோம் !!**

**விழ விழ எழுவோம் !!**

## ஒன்று விழ நாங்கள் ஒன்பதாய் எழுவோம்.

# கரிகணன்

Printers of the North

#681, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.

Phone : 0094-21-222 2717 / 21-739 7530, Fax : 0094-21-222 2891

www.harikanan.com email: print@harikanan.com

(சி-3078)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஐ.நாவே! எங்களின் பிள்ளைகளுடன் வாழும் உரிமையை உறுதி செய்'

## 500 ஆவது நாளில் உறவுகள் திரண்டு கிளிநொச்சியில் கவனயீர்ப்பு




(பனிக்கன்குளம்)

வலிந்து காணாமலாக்கப்பட்ட எமது உறவுகளுக்கு பதில் தா... சர்வதேசமே திரும்பிப்பார்...! காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேசத்தை நாடி 500 ஆவது நாளில் தலையில் கறுப்புப் பட்டியணிந்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஏ-9 வீதியில் ஒன்று திரண்டு நேற்று முற்பகல் 10 மணியளவில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

சர்வதேசத்தை நம்பியே வீதியில் உள்ளோம் என தெரிவித்தும் சர்வதேசமே எமக்கு தீர்வு பெற்று தர வேண்டுமெனக் கூறியும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறும் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறும் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்துக்கு முன்பாக கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி கூடாரம் அமைத்து ஆரம்பமான கவனயீர்ப்பு போராட்டமானது ஒருவருடம் கடந்தும் நேற்று 500 நாளை எட்டியுள்ளது. இந்நிலையில் இலங்கை அரசு எந்த தீர்வையும் தமக்கு வழங்கவில்லை என தெரிவித்து சர்வதேசமே எமக்கு தீர்வு பெற்று தர வேண்டும் எனவும் தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் "சர்வதேசமே! இலங்கை அரசு சர்வதேசத்துக்கு ஒன்றும், எங்களுக்கு ஒன்றும் கூறி ஏமாற்றுவது உங்களுக்கு புரியவில்லையா?, ஐ.நாவே! பிள்ளைத் தேடி போராடிய ஏழு தாய்மார் உயிரிழந்தது தெரியாதா?, சர்வதேசமே 500 நாட்கள் கடந்தும் ஏன் இந்த மௌனம்?, ஐ.நாவே! எங்கள் பிள்ளைகளுடன் நாங்கள் வாழும் உரிமையை எங்களுக்கு உறுதி சொல்!, ஐ.நா! சரணடைந்தவர்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடு" ஆகிய வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை கண்ணீருடன் தலையில் கறுப்புப்பட்டிகள் அணிந்து கோஷங்கள் எழுப்பியிருந்தனர். (2-281)

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்கு பிறப்பு, குடியுரிமை சான்றிதழ்கள்

### கிளிநொச்சியில் நேற்று வழங்கப்பட்டது



(கண்டாவளை)

தூதரக பிறப்பு சான்றிதழ் மற்றும் குடியுரிமை சான்றிதழ் பெறுவதற்கான நடமாடும் சேவை கிளிநொச்சியில் நடைபெற்றது.

"ஒப்பர் சிலோன்" எனும் அமைப்பின் ஏற்பாட்டில் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஆகியன குறித்த சேவையை முன்னெடுத்திருந்தனர்.

நாடு திரும்பிய இலங்கை பிரஜைகளின் பிறப்பு சான்றிதழ் மற்றும் குடியுரிமை சான்றிதழ் ஆகியவற்றை பெற்றுக்கொடுக்கும் விசேட நிகழ்வு இதுவாகும்.

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய மக்களின் பிறப்பு மற்றும் குடியுரிமை சான்றிதழ்களை பெற்றுக் கொடுப்பதற்காக குறித்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச் சேவையில் வடக்கு-கிழக்கில் இருந்து வருகை தந்திருந்த பெரும்பாலான மக்கள் சேவையை பெற்றுக் கொண்டனர். இந்நடமாடும் சேவையில், ஒப்பர் சிலோன் அமைப் பின் பொருளாளரும் ஸ்தாபகருமான சந்திரகாசன், அவ் வமைப்பின் தலைவி சூரியகுமாரி, அமைப்பின் செயலாளர் நடராஜா, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் நாகந்தல, பதிவாளர் திணைக்கள் அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (2-335)

## கைவிடப்பட்ட குளங்களை புனரமைத்து விவசாய நிலங்களை பகிர்ந்தளியுங்கள்

### காணிகளற்ற விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மாந்தை கிழக்கு ஆகிய பகுதிகளில் மக்களின் வாழ்வாதாரப் பயிர்செய்கைக்கு ஏற்ற வகையில் கைவிடப்பட்ட குளங்களைப் புனரமைத்து அதற்குட்பட்ட விவசாய நிலங்களை தமக்கு வழங்குமாறு காணிகளற்ற விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன்குளம் கிராமத்தில் சுமார் 60 இற்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள் வயல் காணிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்தப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்ற விளாத்திக்குளம் வனவள திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதற்குட்பட்ட விவசாய நிலங்களும் கைவிடப்பட்டன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் இக்குளத்தைப் புனரமைத்து இதன் கீழான விவசாய நிலங்களை வழங்குமாறு விவசாயிகள் கோரியுள்ளபோதும், வனவளத் திணைக்களம் குறித்த குளத்தையும் வயல் நிலங்களையும் எல்லையிட்டுள்ளனர்.

இதேபோன்று மாந்தை கிழக்குப்பிரதேசத்திலும் பல குளங்களும் அதற்குட்பட்ட விவசாயக்காணிகளும் வனவளத்திணைக்களத்தினால் எல்லையிடப்பட்டுள்ளன.

இவ்வாறு எல்லையிடப்பட்ட குளங்களையும் வயல்களையும் விடுவித்து காணிகளை பயிர்ச்செய்கைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டுமென காணிகளற்ற மக்கள் கோரியுள்ளனர். (2-315)

வன்னி வலம்



தேசிய இந்து சமய அறநெறிக்கல்வி விழிப்புணர்வு மாதத்தை முன்னிட்டு 'இளம் இந்துச் சிறார்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்கு அறநெறிக் கல்வி தேவையென உணர்ந்திடுவீர்" எனும் தொனிப்பொருளில் இந்து அறநெறி விழிப்புணர்வு நிகழ்வு நேற்று மன்னார் மாந்தை பிரதேசத்தில் நடைபெற்றது. மாந்தை மேற்கு இந்து மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சமயத்தலைவர்கள், பொதுமக்கள், சிறுவர்கள்,கலாசார உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து வசதி குறைந்த தூர

# பாடசாலைகள் காலையில் நேரம் தாழ்த்தி ஆரம்பிக்க முடியும்

## வடக்கு மாகாண கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து வசதிகளின் குறைபாடுகள் காணப்படுகின்ற தூரப்பாடசாலைகளை தினமும் காலையில் நேரம் தாழ்த்தி ஆரம்பிக்கமுடியும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

. வடக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகள் தினமும் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன், பாடசாலைகளில் கைவிரல் அடையாளம் இடும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.




இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் இன்மை, மற்றும் ஆசிரியர்கள் தங்கி நிற்கக்கூடிய வசதிகள் இல்லாத காரணத்தினால் வெளி மாவட்டங்கள் இருந்து தினமும் பாடசாலைக்கு வருகின்ற ஆசிரியர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில கடந்த 28 ஆம் திகதி மு/ பாண்டியன் குளம் மகா வித்தியாலயத்தில் பொன்விழா நிகழ்வின் போது மு/பாண்டியன்குளம் மகா வித்தியாலய அதிபரால் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அங்கு கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் இவ்வாறான கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற வெளி மாவட்ட ஆசிரியர்களின் இவ்வாறான கஷ்டங்களை கவனத்தில் கொண்டு இவ்வாறு பிரச்சினைகள் காணப்படுகின்ற பாடசாலைகளை தினமும் காலை 8 மணிக்கோ அல்லது 8..30 மணிக்கோ ஆரம்பித்து பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி அல்லது 2.30 மணிக்கு முடிக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.(2-315)

# தட்டுவன்கொட்டு கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு

## நீர்த்தாங்கி மூலம் குடிநீர் வழங்க ஏற்பாடு



(கண்டாவளை)

ஆனையிறவு தட்டுவன் கொட்டி கிராமத்தில் நிலவி வந்த குடிநீர்ப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்துள்ளார் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

முரசுமோட்டை கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ம.நந்தகுமாரின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு நடைபெறும் வீதி புனரமைப்பு பணிகளையும் அங்கு நிலவும் குடிநீர்ப்பிரச்சினைகளையும் ஆராயச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் புனரமைப்பு செய்யப்படும் வீதிகளை பார்வையிட்டதுடன் மக்களிடம் குடிநீர்ப்பிரச்சினை தொடர்பாக கேட்டறிந்தார். இதனையடுத்து உடனடித் தீர்வாக கரைச்சிப்பிரதேச சபையின் நீர்த்தாங்கி மூலம் அம்மக்களுக்கு நீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டதுடன் நிரந்தரத்தீர்வாக கிளிநொச்சி மாவட்ட நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் உப்பு நீரை நன்னீராக்கி வழங்கும் குடிநீர் சுத்திகரிப்பு செயன்முறையும் மறுநாளே ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினருடன் கிளிநொச்சி மாவட்ட பொறியியலாளர் எஸ்.ரகுநாதன், தொழில்நுட்ப உத்தியோகத்தர் கந்தசாமி சிவகணேசன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், செயலாளர் கம்சநாதன் உட்பட கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்களான சின்னையா தவபாலன், அருணாசலம் சத்தியானந்தன், சின்னையா சுப்பையா ஆகியோரும் சென்றிருந்தனர். (2-315)

# மாகாண சபை உறுப்பினரின் நிதியில் வாழ்வாதார உதவிகள் வழங்கல்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா குடியிருப்பு தாயகம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.சத்தியலிங்கத்தின் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினரின் 2018ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து பாடசாலை மாணவர்களுக்கு 40 துவிச்சக்கரவண்டிகள், பாலர் பாடசாலைக்கான தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம், 8 ஆடுகள், 2 மாடு வாங்குவதற்கு காசோலைகள்,விசேட தேவைக்குட்பட்டவர் ஒருவருக்கான நாற்சக்கரவண்டி என்பன 9 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா பெறுமதியான நிதியுதவியில் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.





இந் நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள், பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (2-281)

# மாங்குளம் மகா வித்தி. வருடாந்த பரிசளிப்புவிழா

(முல்லைத்தீவு)

மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா- 2018 நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை திறந்த வெளி அரங்கில் வித்தியாலய அதிபர் த.யோகானந்தராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

# நிரந்தர வைத்தியரின்றி இயங்கும் நட்டாங்கண்டல் வைத்தியசாலை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு நட்டாங்கண்டல் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேசத்திற்குட்பட்ட நட்டாங்கண்டல் வைத்தியசாலை கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக நிரந்தர வைத்தியரின்றிக் காணப்படுகின்றது.

இங்கு சிகிச்சைக்காகச் செல்லும் அவசர நோயாளர்கள் நோயாளர் காவுவண்டி மூலம் மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தற்போது நிரந்தர வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படாத நிலையில் திங்கள், புதன் வெள்ளி ஆகிய நாட்களில் மல்லாவி வைத்தியசாலையில் சேவையாற்றும் வைத்தியர்களால் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

ஏனைய வார நாட்கள் வைத்தியர்கள் அற்ற நாட்களாக காணப்படுகின்றன. எனவே இங்கு ஒரு நிரந்தர வைத்தியரை நியமிக்க வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. (2-315)

# சிறுபோகச் செய்கையை பாதுகாப்பதற்கு கால்நடைகளைக் கட்டுப்படுத்துங்கள்

## கமக்கார அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச்செய்கையை பாதுகாப்பதற்கு ஏற்ற வகையில் கால்நடைளைக் கட்டுப்படுத்த கமக்கார அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் தமது பயிர்ச்செய்கைகளை கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு மேற் கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கையை பாதுகாக்கும் வகையில் கால்நடைகளைக் கட்டுப்படுத்த இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையினால் இரவுபகலாக கால்நடைகள் நெற்பயிர்களை அழித்து வருகின்றன.

இவ்வாறு கால்நடைகளைக்கட்டுப்படுத்த பொறுப்பாகவுள்ள கமநலசேவை நிலையமும் கமக்கார அமைப்புக்களும் இதில் அசமந்தப் போக்கினைக்காட்டி வருவதுடன் கமநலசேவை நிலையத்தினால் ஒவ்வொரு கமக்கார அமைப்புக்களுக்கும் வழங்கப்பட்ட முட்கம்பிகளை அமைப்பின் முக்கிய பொறுப்பிலுள்ளவர்கள் அவற்றை பெற்று தமது பயிர்ச் செய்கைகளை பாதுகாக்கும் வேலிகளை அமைத்துள்ளனர்.

இதனால் ஏனைய விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமது பயிர்ச்செய்கைகளை இரவுபகலாக கால்நடைகள் மேய்ந்து அழித்து வருவதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட சிறுதானியச் செய்கைகளையும் கட்டாக்காலி கால்நடைகள் அழித்துள்ளன.

இவ்வாறு பெருந்தொகை நிதியைச் செவழித்து மேற்கொள்ளப்பட்ட தமது பயிர்ச் செய்கைகள் அழிக்கப்பட்டு வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (2-315)

# 8 கிராமங்களில் நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கப்பட வேண்டும்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் எட்டுக்கிராமங்களில் நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கவேண்டியுள்ளதாக கமநலசேவை நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் அறுவடை செய்கின்ற நெல்லை உலரவிடுவதற்கு ஏற்ற வகையில் விவசாயிகளுக்கான நெல் உலரவிடும்தளங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு நிதியீட்டங்கள் ஊடாக கமநலசேவை நிலையம் விவசாயத்திணைக்களம், பிரதேச செயலகம் என்பவற்றின் ஊடாக இவ்வாறு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதும், எட்டு வரையான விவசாய கிராமங்களில் நெல் உலரவிடும் தளங்கள் அமைக்கவேண்டிய தேவை காணப்படுவதாகவும் மேற்படி புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் அடுத்த தலைமுறையை நகர விடாமல் தடுப்பதற்கு சதி



## வியாழேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

(ஏறாவூர்)

வடக்கு-கிழக்கில் பொலிஸாரும் இராணுவத்தினரும் அதிகமாக குவிக்கப்பட்டுள்ள போதும் போதைப்பொருள் விநியோகம் அதிகரிப்பதானது, வடக்கு-கிழக்கில் வாழும் சிறுபான்மை மக்களை அடுத்த கட்டத்திற்கு நகர விடாமல் தடுக்கும் செயலாகவே அமைந்துள்ளதென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்எஸ்வியாழேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். சுழிபுரத்தில் 6 வயது சிறுமியொருவர் படுகொலை செய்யப்பட்டமையை கண்டித்து, மட்டக்களப்பில் நேற்று முன்தினம் கண்டன போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நல்லாட்சியில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகளும், துஷ்பிரயோகங்களும், அடக்கு முறைகளும் அதிகரித்துச் செல்கின்றன என்று சுட்டிக்காட்டிய வியாழேந்திரன், அன்று வித்தியா, சேயாவின் கொலைகளும் இன்று சுழிபுரம்றெஜினாவின்கொலையும் போதையின் உச்சத்திலேயே இடம்பெற்றுள்ளதென குறிப்பிட்டார். பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கில் எவ்வாறு இந்தளவு போதைப் பொருள் விநியோகம் இடம்பெறுகின்றதென வியாழேந்திரன் கேள்வியெழுப்பினார்.

இச்செயற்பாடானது, சிறுபான்மை மக்களை திட்டமிட்டு அழிக்கும் வகையில், அவர்களை போதைக்கு அடிமையாக்கும் திட்டமிட்ட நிகழ்ச்சிநிரலின் கீழேயே முன்னெடுக்கப்படுவதாக தெரிகின்றன.

போதையை பயன்படுத்தி இவ்வாறான கொடூரமான செயல்களை செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அதிகபட்ச தண்டனை கொடுக்க வேண்டுமென வலியுறுத்திய வியாழேந்திரன், அதற்கேற்ற வகையில் சட்டத்தில் திருத்தங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும் வலியுறுத்தினார். (இ)

# ஜனாதிபதி வேட்பாளர் இன்றி தவிக்கும் ஐ.தே.கட்சி மற்றும் சுதந்திரக்கட்சி

## கூட்டு எதிரணி எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கோ எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக நிறுத்த எவரும் இல்லை என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெயான் சேமசிங்க தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என அந்த கட்சி யின் பொதுச் செயலாளரான் அமைச்சர் அகில விராஜ் காரியவசம்கூறியுள்ளார்.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் தன்னை நிறுத்தினால், ஐக்கிய தேசியக்கட்சியை வெற்றி பெற செய்ய முடியும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெற்றி பெற முடியாது என்பது ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் சரத் பொன்சேகாவுக்கு முடியாது என்பதை நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் இணக்கப்பாடுகள் இல்லை. யாரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவது என்பது தொடர்பான சிக்கல் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சியினருக்கு இருப்பதாகவும் ஷெயான் சேமசிங்க தெரிவித்தார். (இ)



# அன்பின் அண்ணனுக்கு தங்கை எழுதும் மடல்

எங்கே அண்ணா சென்று விட்டாய் உன் ஒரு தங்கை மட்டும் அல்ல பல்லாயிரம் தங்கைகள் தேடுகின்றனர். நீ எங்களை மறந்து போனதால் எம் மண்ணில் நாம் படும் வேதனை சொல்லில் அடங்காது அண்ணா. மண் மேடுகளிலும் கல்லறைகளிலும் பற்றைக்காடுகளிலும் உன் தங்கைகளின் மரண ஓலம் கேட்கவில்லையா? அல்லது கேட்டும் நீ வரவில்லையா? இனியும் நீ வராது போனால் எம் இனத்தில் பெண், ஆண் மக்களே இல்லாது போய்விடும்.

இனி வரும் தலைமுறைக்கு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் அண்ணா?உன்னை இழந்து நான் மட்டும் நோகவில்லை. உன் அன்னையும் தான் தங்கமேனி நொந்து பூமித் தாய் அழுகின்றாள். தான் பெற்ற மகன் எங்கே யென்று தேடி அலைகின்றாள்.

அண்ணா நீதி தேவதையின் கண்களைத் தான் மூடிக் கட்டி விட்டார்களே உன் கண்ணையுமா கட்டினார்கள்? அண்ணனா நீ இருந்த காலத்தில் நான் நள்ளிரவு 12 மணிக்கு கூட கலை நிகழ்ச்சி, இன்னிசைக் கச்சேரி பார்த்து மகிழ்ச்சியாக அன்று பூத்த செந்தாமரை போல் சந்தோசமாக நடமாடினேன். இன்று பகல் 12 மணிக்குக் கூட பாடசாலை விட்டு என்னால் வரமுடியவில்லை. அண்ணா வீதியெங்கும் குள்ள நரிக்கூட்டமும் காமுகர்களின் களியாட்டமும் நினைத்தாலே உடல் நடுங்குகிறது.

அண்ணா என்னால் சொல்ல முடியவில்லை. சொல்லாமலும் இருக்க முடியவில்லை. காமுகர்களின் மூச்சுப்பட்ட எத்தனை மொட்டுக்கள் முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன.

எத்தனை பூக்கள் இதழ்களாக உதிர்கின்றன. இத்தனைக்கும் நீதி கேட்க யாருமே இல்லையேஅண்ணா. அண்ணன் என்ற அழகான உறவாக எமக்கிருந்தது நீ மட்டுமே. நீயும் இல்லையென்றால் நாம் தெய்வத் திடம் முறையிடுவோம்.

அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று கொல்லும் என்பதையும் நான் மறந்து விடவில்லை அண்ணா? என்றோ ஒரு நாள் எம் இன த்தின் ஆண்மாக்கள் ஒன்று சேர்ந்து பெரும் சக்தியாக மாறி கயவர்களை எறிப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். எது எப்படி இருந்தாலும் எம் அன்னைக்கு நீ வேணும் அண்ணா. எம் மண்ணுக்கும் நீ நிச்சயம் தேவை அண்ணா. என்றோ ஒரு நாள் நீ வருவாய் எனக் காத்திருக்கும் ஜீவன்கள்.

அன்புடன்
தங்கை எஸ்.தல்கி


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1ஆம் பாதம் செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: B/7799 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4ம் பாதம் சூரிசெவ் 12 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/8232 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2ம் பாதம் செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் லண்டன்<br>தொ.இ: B/7800 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 1ம்பாதம் கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L தனியார் தொழில்<br>தொ.இ: G/8233 |
| பிறப்பு: 1984 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:அரசதொழில் BSC P.G.D.E<br>தொ.இ: B/7802 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4ம் பாதம் கி.பா: 13 சூரிசெவ் 9 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC டிப்ளோமா அரசதொழில்<br>தொ.இ: G/8234 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1ம் பாதம் கி.பா: 43 சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/Lதனியார் தொழில்<br>தொ.இ: B/7804 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1ம்பாதம் செவ் 4 ல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:MBBS வைத்தியர்<br>தொ.இ: G/8238 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை ஊழல் மோசடி ஒட்டிக்கொண்டுள்ளது

## ஹர்ஷ டி சில்வா விசனம்



(கொழும்பு)

கலாநிதி சமன் கலேகம வின் நினைவு தின இரண்டாம் நாள் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றன.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இதன்போது அரசாங்கத்தில் இடம்பெறும் ஊழல் மோசடி தொடர்பில் கருத்துத் தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் வருகை தருகின்றபோது சிலர் இலஞ்சம் கோருவதாகவும், அரசியல்வாதிகள் சிலர் கோரும் தொகை முதலீட்டினை விட அதிகம் எனவும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதன் காரணமாகவே முதலீட்டாளர்கள் வேறு நாடுகளை நோக்கிச் செல்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை ஊழல் மோசடி ஒட்டிக் கொண்டிருப்பதாகவும் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்தார். (இ)

# பட்டதாரிகளுக்கு வட்டியில்லாக்கடன்

## திறைசேரி நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் 25 வயதிற்குட்பட்ட இளைஞர். யுவதிகளுக்கு தொழிற்றுறையில் ஈடுபடுவதற்காக வட்டியில்லாக் கடனை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது.

"என்டர்பிறைஸ் ஸ்ரீ லங்கா" என்ற வேலைத் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்படும் என திறைசேரி பிரதி செயலாளர் ஏ. ஆர். தேசப்பிரிய தெரிவித்தார்.

"உலகத்தை நோக்கி முன்னேறக்கூடிய ஆற்றல் மிக்க தொழிற்றுறையினர் நாட்டில் இருக்கின்றனர். இருப்பினும் தற்பொழுது சந்தையில் நிலவும் வட்டி வீதங்களின் கீழ் கடனை பெற்று வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பது சிரமமாக இருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர்" என அவர் தெரிவித்தார்.

இந்த நிலைப்பாட்டை முற்றாக புறந்தள்ளி ஆற்றல்மிக்க தொழில் துறையினர் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்ய வைப்பதே "என்டர்பிறைஸ் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு அமைவாக தேசிய கடன் பாதுகாப்பு நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு தொழிற்றுறையினருக்கு கடன் வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சிரமங்கள் இன்றி தொழிற்றுறையினருக்கு வர்த்தக நடவடிக்கைளை ஆரம்பிக்க முடியும் என்றும் திறைசேரி பிரதி செயலாளர் ஏ.ஆர்.தேசப் பிரிய மேலும் தெரிவித்தார். (இ)

# தடுப்பூசி ஏற்றிக் கொள்ள 40 குடும்பங்கள் மறுப்பு

## மூட நம்பிக்கையால் வீட்டிலேயே மகப்பேறுகள்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சுமார் 40 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ள மறுப்பு தெரிவித்து வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச். எம். தாரிக் தெரிவித்தார்.

ஏறாவூரில் புதிதாக உருவெடுத்துள்ள சுகாதார சேவைகளுக்கு இடையூறான மறுப்பு நடவ்டிக்கைகள் குறித்து நேற்று ஞாயிறுக்கிழமை கருத்து தெரிவித்த அவர், 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நபர் மாத்திரமே இவ்வாறு தடுப்பூசி ஏற்றுவதற்கும், சுகாதார சேவைகளை அணுகுவதற்கும் மறுப்புத் தெரிவித்து வந்திருந்தார்.

ஆனால். நாளடைவில் இந்தவித மூட நம்பிக்கைகள் வியாபித்து இப்பொழுது 40 குடும்பங்களைச் சேர்ந்த பெரும் தொகையான நபர்கள் முக்கியமான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதற்கும், பாதுகாப்பான மகப்பேற்றைச் செய்து கொள்வதற்கும், இன்னும் பிற சுகாதார சேவைகளை அணுகுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதோடு சுகாதார வசதிகளை அணுகும் ஏனையவர்களுக்கும் அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர்.

முறைப்படியான சுகாதார சேவைகளை அணுகாமல் 2016ஆம் ஆண்டு ஒரு மகப்பேறும் இதுவரை 7 மகப்பேறுகளும் சம்பவித்திருக்கின்றன.

இவர்கள் தமது காலடியில் அதிவசதி கொண்ட வைத்தியசாலைகள் இருக்கும் பொழுது சுமார் 4 மணித்தியால தூரப் பயணமுள்ள பொத்துவில் எனும் தொலை தூரக் கிராமத்திற்குச் சென்று பாரம்பரிய மகப்பேற்று உதவியைப் பெற்றுள்ளதோடு தாய் சேய் பாதுகாப்பு தடுப்பூசி எதனையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் கண்டறியப்பட்டிருக்கின்றது.

தாய் சேய் இறப்பு மற்றும் அவர்களது சுகாதார நலன்களைக் கருத்திற்கொண்டு வீட்டுப் பிரசவங்கள் இடம் பெறக் கூடாது என்பதே சுகாதாரத் துறையின் கொள்கையாகும்.

இதனைச் சமூக மட்டத் தலைவர்கள் கருத்திற் கொண்டு உடனடியாகக்கரும மாற்ற வேண்டும்.

இல்லையேல் பிரதேசத்தின் சுகாதார நலன்கள், ஆரோக்கியம் உள்ளிட்ட விடயங்கள் எதிர்வரும் காலங்களில் பெரும் சவாலைச் சந்திக்கும்.

நாட்டில் தாய் சேய் மரணங்கள், தொற்று நோய்கள் இடம்பெறாதவாறும் இன்னபிற சுகாதார நலன்களை மேம்படுத்தி சுக வாழ்வையும் ஆரோக்கிய சமூகத்தையும் உருவாக்குவதற்காகவும் அரசாங்கம் பல கோடிக்கான ரூபாய்களைச் செலவிடுகிறது.

அவ்வாறான முன்னெடுப்புக்கள் நடைபெறுகின்ற போது இத்தகைய மூடத்தனமான கொள்கைகள் சமூகங்களில் ஊடுருவது நாட்டு நலனுக்குக் கேடானது என்றும் அவர் தெரிவித்தார்.

இத்தகைய மூட நம்பிக்கைகள் அக்குறணை, மாத்தளை, நாவலப்பிட்டி, புத்தளம், தோப்பூர் போன்ற இடங்களில் முளை விட்டிருந்து இப்பொழுது நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பரவி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# இலங்கை தேசிய விமான சேவை பயணங்கள் தடைப்படும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய விமான சேவையான இலங்கை எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கான எரிபொருள் விநியோகத்தை நாளை மறுதினம் புதன்கிழமையுடன் நிறுத்தவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எச்சரித்துள்ளது.

தமக்கு செலுத்த வேண்டிய சுமார் 14 பில்லியன் ரூபாவில் குறைந்தபட்சம், ஒரு பில்லியன் ரூபாவை குறித்த காலக்கெடுவுக்குள் வழங்கத் தவறினால், எரிபொருள் விநியோகம் நிறுத்தப்படும் என்று இலங்கையின் பெற்றோலியக் கூட்டுத்தாபன்ம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான முடிவை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை சிவில் விமான, போக்குவரத்து அமைச்சு, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கும் அறிவித்துள்ளது. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இந்த முடிவு குறித்து, இலங்கை விமான சேவை அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன், இந்த முடிவினால், விமான சேவைகள் நிறுத்தப்படும் ஆபத்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு, இலங்கை விமான சேவை 14 பில்லியன் ரூபாவையும், மின்சார சபை 46 பில்லியன் ரூபாவையும் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



யாழ். அரியாலை பூம்புகார் சண்முகா முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் பூம்புகார் பாடசாலை மைதானத்தில் பூம்புகார் சனசமூக நிலையத் தலைவர் சி.அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியுமான ஜொனி மதுரநாயகம் மற்றும் தாங்கும் கரங்களின் காப்பாளர் அருட்கலாநிதி ஸ்ரனி அன்ரனி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பூம்புகார் அ.த.க. பாடசாலை பிரதி அதிபர் து.பிரபாகரன், ஜே/90கிராம உத்தியோகத்தர் கே.மைந்தன், பிரதேச இணைப்பாளர் எ. செந்தூரன், குடும்பநல உத்தியோகத்தர் திருமதி.பி.கார்த்திகா மற்றும் மருத்துவக்கல்லூரி விரிவுரையாளர் திருமதி. சர்மிலா அருண்பாபு ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(படங்கள்:-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பூட்டிய வீட்டில் 11 பேரின் சடலம் கொலையா? தற்கொலையா?



(டில்லி)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பெண்கள் மற்றும் 4 ஆண்கள் பூட்டிய வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் டில்லியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தலைநகர் டில்லியின் வடக்கு பகுதியிலுள்ள புராரி பகுதியிலுள்ள ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் சுப்பர் மார்க்கெட் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், நேற்றுக் காலை அந்த குடும்பத்திலுள்ள 7 பெண்கள் மற்றும் 4 ஆண்கள் பூட்டிய வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

10 பேர் தூக்கியில் தொங்கிய நிலையிலும் 75 வயது பெண் தரையில் கிடந்த படியும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். சடலங்களை மீட்ட பொலிஸார், பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

அவர்கள், தற்கொலை செய்து கொண்டார்களா? கொலை செய்யப்பட்டார்களா? என்பது மர்மமாக இருப்பதால் அப்பகுதியில் பீதி நிலவு கிறது. இந்தச் சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ)

## உச்சநீதிமன்றில் மீண்டும் காவிரி நதிநீர் விவகாரம்

### கர்நாடக அரசு திட்டம்

(பெங்களூர்)

காவிரி விவகார ஆலோசனைக் கூட்டத்தில் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டதற்கு எதிராக உச்சநீதிமன்றில் மேல்முறையீடு செய்ய கர்நாடகா அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவின்படி காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நதிநீர் ஒழுக்காற்றுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு தலைவர், உறுப்பினர்கள், பகுதி நேர உறுப்பினர்கள் 9 பேர் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த ஆணையத்தின் முதல் கூட்டம் இன்று 2 ஆம் திகதி டில்லியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழகம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களின் உறுப்பினர்களும், மத்திய அரசு பிரதிநிதிகளும் பங்கேற்கிறார்கள். இதில் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆலோசிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், கர்நாடகாவில் அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு முதல்வர் குமாரசாமி அழைப்பு விடுத்தார். அதன்படி பெங்களூர் விதான



சவுதாவில் குமாரசாமி தலைமையில் நேற்று முன்தினம் அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இதில் எதிர்க் கட்சி தலைவர் எடியூரப்பா, மத்திய அமைச்சர் சதானந்த கவுடா, அமைச்சர்கள், நீர்வளத்துறை சார்ந்த அதிகாரிகள், எம்.பி.க்கள், காவிரி படுகையில் உள்ள எம்.எல்.ஏக்கள், கர்நாடக சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டதற்கு எதிராக உச்சநீதிமன்றில் மேல்முறையீடு செய்ய கர்நாடகா அரசு தீர்மானம் நிறைவேற்றியது.

இதுமட்டுமல்லாமல் இன்று 2 ஆம் திகதி நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை ஆணைய முதல் கூட்டத்தில் கர்நாடகா தரப்பு கோரிக்கைகள் முன்வைக்கப்படும். காவிரி ஆணையம் அமைக்கவும், மாற்றவும் நாடாளுமன்றத்திற்கு உரிமை உள்ளது என கர்நாடகா அரசின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சிவக்குமார் தெரிவித்தார்.

மேலும், வரவுள்ள நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் கர்நாடகாவின் அனைத்து எம்.பிக்களும் காவிரி விவகாரம் குறித்து பிரச்சினை எழுப்பவும் திட்டமிட்டுள்ளனர்.

இதுதொடர்பாக முதலமைச்சர் குமாரசாமி கூறுகையில், காவிரி மேலாண்மை ஆணையத்தில் கர்நாடகத்திற்கு பாதகமான விதிமுறைகளுக்கு எதிராக போராடுவோம் எனத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் முதல்வரும், கூட்டணி கட்சியின் முக்கிய தலைவருமான சித்தராமையா கலந்து கொள்ளாதது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. (இ)

## ட்ரம்புக்கு பதிலடியாக வரியை அதிகரித்த கனடா

(ஒட்டாவா)

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் அலுமினியப் பொருட்களுக்கு ட்ரம்ப் வரியை அதிகரித்ததையடுத்து, அமெரிக்க தயாரிப்பு பொருட்களுக்கு கனடா வரியை அதிகரித்துள்ளது.

கனடா, மெக்சிக்கோ மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இரும்பு மற்றும் அலுமினியப் பொருட்களுக்கு 25 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்றும், ஏற்கனவே அளிக்கப்பட்ட வரி விலக்கு சலுகை இரத்து செய்யப்படுவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் அறிவித்தார்.

இதற்குப் பதிலடி தரும் வகையில், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரி விதிக்கப்படும் என கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்திருந்தார். அமெரிக்காவின் வரி விதிப்பு ஏற்க முடியாத ஒன்று என்றும், தங்களது தொழிலாளர்கள் மீது தங்களுக்கும் அக்கறையிருப்பதாக தெரிவித்த ஜஸ்டின் ட்ரூடோ, அமெரிக்கப் பொருட்கள் மீதான இறக்குமதி வரி ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் தெரிவித்தார்.

இதன்படி, வரி விதிக்கப்படும் பொருட்களுக்கான பட்டியலை கனடா வெளியிட்டது. இதில், சில பொருட்களுக்கான வரிப் பட்டியல் 10 முதல் 25 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம், ரூ.86 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு அமெரிக்கப் பொருட்கள் மீதான வரி உயர்த்தப்பட்டுள்ளது. (இ)

## அகதிகளின் குடும்ப...

## ட்ரம்பின் கொள்...

## வெள்ளை மாளிகை...

## பல்லாயிரக்கணக்க...



(வோஷிங்டன்)

அமெரிக்காவிற்குள் அகதிகளாக வரும் பெற்றோர்களிடமிருந்து அவர்களின் குழந்தைகளைப் பிரிக்கும் ட்ரம்பின் கொள்கையை எதிர்த்து அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையை நோக்கி ஆயிரக் கணக்கானோர் பேரணியாக சென்றனர்.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன்படி அமெரிக்காவில் நுழையும் அகதிகளையும் அவர்களின் குழந்தைகளையும் பிரித்து வைக்க வேண்டும் என் உத்தரவிட்டார். ட்ரம்பின் உத்தரவின் அடிப்படையில், பெற்றோர்களிடமிருந்து குழந்தைகள் பிரிக்கப்பட்டனர்.

இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, தனது கொள்கையில் பின்வாங்கிய ஜனாதிபதி ட்ரம்ப், பிரிக்கப்பட்ட குழந்தை




## தலிபான்கள் விரும்பினால் போர்நிறுத்தம் தொடரும்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ரம்ழானையொட்டி அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் முடிவடைந்த நிலையில், தலிபான்கள் விரும்பினால் போர் நிறுத்தத்தை நீடிக்கத் தயார் என அந்நாட்டின் ஜனாதிபதி அஷ்ரப் கனி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாத அமைப்பு அரசுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டு வருகிறது. நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றி தன்வசம் வைத்துள்ள தலிபான், அரசைக் கவிழ்க்க போராடி வருகிறது. இதனால் அரசுக்கு எதிராகப் போட்டி அரசு ஒன்றையும் நடத்தி வருகிறது.

தலிபான் அமைப்பைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி அஷ்ரப் கனி தலைமையிலான அரசும் பல்வேறு



வழிகளில் போராடி வருகிறது. இருதரப்பிலும் போரால் பல உயிர்கள் பலியாகின.

## ட்ரம்பைக் கலாய்த்த காமெ...

(வோஷிங்டன்)

அமெரிக்க தொலைக் காட்சி பிரபலம் ஜான் மெலெண்டெஸ். காமெடி நடிகர், ரேடியோ ஜாக்கி என பன்முகத்தன்மை கொண்டவர்.

அடிக்கடி பிரபலங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி கலாய்ப்பது இவரது வேடிக்கையான பணி. இந்நிலையில், கடந்த வாரம் வெள்ளை மாளிகைக்கு தொலைபேசி அழைப்பை செய்துள்ளார். அப்போது, எதிர்முனையில் ஜனாதிபதி ட்ரம்ப் மருமகன் ஜரேட் குஷ்னர் பேசியுள்ளார்.

அவரிடம், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நியூ ஜெர்சி மாகாண செனட்டர் பாப் மெலெண்டெஸ் பேசுவதாக தன்னை ஜான் அறிமுகப்படுத்தியுள்ளார். ட்ரம்பிடம் பேச வேண்டும் என தனது கோரிக்கையும் ஜான் முன் வைத்துள்ளார். இதனையடுத்து, உங்களது விருப்பத்தை ட்ரம்பிடம் தெரிவிப்பதாக குஷ்னர் தெரிவித்தார்.

சில மணி நேரம் கழித்து, அமெரிக்க ஜனாதிபதிக்கான



பிரத்தியேக விமானத்தில் இருந்து ட்ரம்ப், ஜானுக்கு போன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ங்களைக் குலைக்கும் ...கைக்கு எதிராக ...கை நோக்கி பேரணி

## ...கானோர் பங்கேற்பு

...களை பெற்றோர்களிடம் ஒப்படைக்க அனுமதித்தார். இந்நிலையில், ட்ரம்பின் குடியேற்ற கொள்கையை எதிர்த்து நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதியின்வெள்ளை மாளிகையை நோக்கி ஆயிரக்கணக்கானோர் பேரணியாகச் சென்றனர்.



அவர்கள் ட்ரம்பின் குடியேற்ற கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பதாகைகளை ஏந்தியவாறு அவருக்கு எதிராக கோஷங்களை எழுப்பியபடி சென்றனர்.

மேலும் அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் இதே கோரிக்கையை வலியுறுத்தி பேரணிகள் நடைபெற்றன.

கடந்த வாரம் இதே காரணத்திற்காக இந்திய வம்சாவளி எம்.பி. பிரமிளா ஜெயபால் செனட் சபை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அவருடன் சேர்ந்து போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 500 இற்கும் மேற்பட்ட பெண்களை பொலிஸார் கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

இதற்கிடையே கடந்த மாதம் இஸ்லாமியர்களின் புனித மாதமான ரம்ழான் கொண்டாடப்பட்டது. ரம்ழானை முன்னிட்டு, 5 நாள் போர் நிறுத்தம் ஒன்றை ஜனாதிபதி அஷ்ரப் கானி அறிவித்திருந்தார். இதனை ஏற்ற தலிபான் அமைப்பும் 3 நாள் போர் நிறுத்தத்துக்கு ஒப்புதலளித்திருந்தது.

இந்நிலையில், இந்த போர் நிறுத்தம் முடிவடைந்து விட்டதால், தலிபான் அமைப்பைச் சேர்ந்தவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மீண் டும் போர்க்களம் திரும்பினர். எனவே, அரசு படைகளும் போர் நிறுத்தம் முடிந்து பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில் இனி ஈடுபடும் என ஜனாதிபதி அஷ்ரப் கனி அறிவித்துள்ளார். அதன்படி தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர்தொடங்கியுள்ளனர்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அஷ்ரப், அமைதியை விரும்புவதை வெளிக்காட்டவே இந்த போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டதாகவும், தலிபான் அமைப்பு விரும்பினால் எப்போதுவேண்டுமானாலும் போர் நிறுத்தத்தை நீடிக்கத் தயார் எனவும் தெரிவித்தார். (இ)



# ...டி நடிகர்



செய்துள்ளார். செனட்டர் பாப் மெலெண்டெஸிடம் பேசுவதாக நினைத்து ஜான் மெலெண்டெஸிடம் பல்வேறு விவகாரங்கள் குறித்து ட்ரம்ப் மிக தீவிரமாக பேசியுள்ளார். இந்த குரல் பதிவை ஜான் மெலெண்டெஸ்தனது இணையத்தளத்தில் வெளியிட அது வைரலாக பரவி வருகிறது.

பாப்மெலெண்டெஸ் அண்மையில் பரிசுப்பொருள் பெற்ற வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். அதற்கு, தனது வாழ்த்துக்களை ட்ரம்ப் தெரிவித்தார். குடியேறிகள் விவகாரம், உச்சநீதிமன்றில் புதிய நீதிபதியை நியமிப்பது என பல விவகாரங்கள் தொடர்பாக ட்ரம்ப் ஜானிடம் விவாதித்துள்ளார்.

இந்த குரல் பதிவு விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள வெள்ளை மாளிகை, சில நேரங்களில் ஜனாதிபதியின் தொடர்பு எல்லைக்குள் இது போன்ற பிரச்சினைகள் வந்து விடுகின்றன எனக் கூறியுள்ளது. ஜனாதிபதியை ஏமாற்றியதற்காக ஜான் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் பரவிய நிலையில் 'நான் இன்னும் கைது செய்யப்படவில்லை' என ஜான் மெலெண்டெஸ் [illegible] பதிவிட்டுள்ளார். (இ)

# சுவிஸ் வங்கியில் பதுக்கிய கறுப்புப் பணம் ஏழைகளுக்கு

## நைஜீரியா முன்மாதிரி



நைஜீரியாவிடம் சுவிட்சர்லாந்து திரும்பியளித்துள்ளதாக நம்பப்படுகிறது

(சூரிச்)

சுவிஸ் வங்கியிலுள்ள இந்தியர்களின் பணம் 2017 ஆம் ஆண்டில் இருமடங்காகியுள்ளது.

இந்நிலையில், ஏற்கனவே சுவிஸ் வங்கியில் இருந்த கறுப்புப் பணத்தை வைத்து இந்தியர்களின் கணக்கில் தலா ரூ.15 இலட்சம் போடப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை பாஜக நிறைவேற்றாத நிலையில், சுவிஸ் வங்கியில் இந்தியர்களின் வைப்புத் தொகை அதிகரித்திருப்பதாக சமூக வலைத்தளப் பயன்பாட்டாளர்கள் கேள்விகள் எழுப்பி வருகின்றனர்.

ஆனால், உண்மையிலேயே ஊழல் செய்து சுவிஸ் வங்கியில் பதுக்கப்பட்டுள்ள பணத்தை தமது நாட்டு மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் திட்டத்தை செயற்படுத்தவுள்ளது நைஜீரியா அரசு.

நைஜீரியாவின் முன்னாள் இராணுவ ஆட்சியாளரான சானி அபாஷா கொள்ளையடித்த பணத்தை ஏழைக் குடும்பங்களுக்கு பிரித்தளிக்கவுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

300 மில்லியன் டொலரை சுவிஸ் அதிகாரிகள் திருப்பியளித்த பிறகு அடுத்த மாதம், இதனை மக்களுக்கு பிரித்தளிக்கும் பணி தொடங்கவுள்ளது.

1990களில் அபாஷாவால் கொள்ளையடிக்கப்பட்ட இந்தப் பணம், 3 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்படும். ஒவ்வொரு குடும்பமும் மாதத்திற்கு 14 டொலர் பெறும்.

அடுத்த வருடம் நடக்கவுள்ள தேர்தலில் வாக்காளர்களைக் கவரவே இது வழிவகுக்கும் என விமர்சகர்கள் அஞ்சுகின்றனர்.

நைஜீரியாவின் 36 மாநிலங்களில், 19 மாநிலங்களில் வசிக்கும் மக்களுக்கு இப்பணம் வழங்கப்படவுள்ளது.

அபாஷா 1993 முதல் 1998 வரை ஆட்சியில் இருந்தபோது, கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்பட்ட பில்லியன் கணக்கான டொலர்களில் ஒரு பகுதி, முதலில் லக்சம்பர்க் நாட்டில் சேமிக்கப்பட்டது.

மாரடைப்பினால் ஜூன் 8 ஆம் திகதி 1998 இல் இறக்கும் முன்பு வரை நைஜீரியாவை இரும்புக்கரம் கொண்டு அவர் ஆண்டு வந்தார்.

கொள்ளையடிக்கப்பட்ட சொத்துக்களை மீட்கவுள்ளதாக 2015 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதி முஹமது புஹாரி அறிவித்தார். தற்போது மீண்டும் அவர் தேர்தலில் போட்டியிடுகிறார்.

கடந்த 10 வருடங்களில், ஒரு பில்லியன் டொலரை நைஜீரியாவுக்கு பணத்தை திரும்ப அனுப்புவதில், கடுமையான நிபந்தனைகள் இருக்கும் என நைஜீரியாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட சுவிட்சர்லாந்து அதிகாரிகளில் ஒருவரான ராபர்டோ பால்சரேட்டி தெரிவித்தார்.

நைஜீரியாவில் பணம் வழங்குதல், ஏழைக் குடும்பங்களுக்கு உதவும் சமூக பாதுகாப்பு திட்டங்களில் ஒன்றாகும்.

உலக வங்கியின் மேற்பார்வையில், ஜூலை மாதம் முதல் சிறு சிறு தொகையாக தவணை முறையில் பணம் வழங்கப்படவுள்ளது. இதில் உலக வங்கி தொடர் தணிக்கையையும் நடத்தும்.

முதல் தவணைக்கு சரியாகக் கணக்கு காட்டவில்லை என்றால், அடுத்தடுத்த தவணைகள் நிறுத்தப்படும். பணம் மீண்டும் திருடப்படுவதை இது தடுக்கும்" என பால்சரேட்டி நம்பிக்கை வெளியிட்டார். (இ)

# வல்லரசு தலைவர்கள் பின்லாந்தில் சந்திப்பு

(வோஷிங்டன்)

பின்லாந்து தலைநகர் ஹெல்சின்கியில் ட்ரம்ப் - புடின் சந்திப்பு நடக்கவுள்ளதாகவும் இந்த சந்திப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி நடப்பதாகவும் இருதரப்பும் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.



அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஆண்டு ட்ரம்ப் பதவியேற்ற பின் இதுவரை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை தனிப்பட்ட முறையில் சந்தித்து பேசவில்லை. ஜேர்மனி மற்றும் வியட்நாமில் நடந்த பொருளாதார மாநாடுகளில் இரு தலைவர்களும் அதிகாரபூர்வமற்ற முறையில் சந்தித்தது மட்டுமின்றி, தொலைபேசி வாயிலாகவும் பேசியிருக்கின்றனர்.

இந்த நிலையில் இரு வல்லரசுகளின் தலைவர் களும் சந்தித்து பேசுவதற்கான நடவடிக்கைகளை வெள்ளை மாளிகையும், கிரம்ளினின் மாளிகையும் மேற்கொண்டு வந்தன.

இதில் 3 ஆவது நாட்டில் இரு தலைவர்களும் சந்தித்து பேசுவது என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி ஐரோப்பிய நாடான பின்லாந்து தலைநகர் ஹெல்சின்கியில் இந்த பேச்சுவார்த்தையை நடத்துவது என தற்போது முடிவு செய்யப்பட்டுவுள்ளது.

இந்த சந்திப்பு எதிர்வரும் 16 ஆம் திகதி நடப்பதாக இருதரப்பும் அதிகார பூர்வமாக அறி வித்தன.

இந்த திகதியையும், இடத்தையும் உறுதி செய்த வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என்றும் தெரிவித்தார்.

முதலில் இரு தலைவர்களும் தனிப்பட்ட முறையிலும், பின்னர் தங்கள் நாட்டுப் பிரதிநிதிகளுடன் இணைந்தும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். பின்னர் கூட்டாக செய்தியாளர்களைச் சந்திக்கும் அவர்கள், கூட்டுப் பிரகடனம் ஒன்றையும் வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வாக்குறுதிகளை உடன் நிறைவேற்ற வேண்டும்

## கனடா வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் குறித்த தனது வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றவேண்டும் என கனடா வேண்டுகோள் விடுத்துள்ளது.

கனடா தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இலங்கைக்கான தூதுவர் டேவிட் மக்கினன் இதனைத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் சட்டத்தின் ஆட்சி அனைவரையும் உள்ளீர்த்தல் போன்றவற்றை வலுப்படுத்துதல் அனைத்து இலங்கையர்களின் நலன்களுக்கும் உகந்த விடயம் என கனடா நம்புகின்றது என தூதுவர் தெரிவித்துள்ளார்.

காணாமல்போனோர் குறித்த அலுவலகத்தை இயங்கச்செய்தது போன்ற ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எங்களுக்கு நம்பிக்கையை அளித்துள்ளன என தெரிவித்துள்ள தூதுவர் இலங்கை தனது மக்களுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கும் அளித்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என கனடா தொடர்ந்தும் வலியுறுத்தும் எனவும் தெரிவித்தார்.

சர்வதேச சமூகம் மற்றும் சர்வதேச சகாக்களுடன் உறவுகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது எனவும் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வனஜீவராசிகள் பிரதியமைச்சரை தாக்க துரத்திய காட்டு யானை



(கொழும்பு)

வனஜீவராசிகள் பிரதியமைச்சர் பாலித தெவரப்பெருமவை காட்டு யானை ஒன்று தாக்குவதற்காக விரட்டிய சம்பவம் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

திம்புலாகலை - நவமில்லான-இத்த பிச்ச குளத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த காட்டு யானைக்கு சிகிச்சையளிக்க சென்றபோதே இந்த சம்பவம் நடந்துள்ளது.

சிகிச்சையளிக்க சென்ற பிரதியமைச்சர் உட்பட குழுவினரை அந்த யானை சுமார் 100 மீற்றர் வரை துரத்தியுள்ளது.

இதனையடுத்து பிரதியமைச்சர் தனது வெள்ளை உடையை கழற்றி விட்டு, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் அணியும் சீருடையை அணிந்து கொண்டு யானைக்கு சிகிச்சையளிக்க சென்றுள்ளனர்.

வெஹெரகலை வன ஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளும் கால்நடை வைத்தியர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த யானைக்கு சிகிச்சையளித்து வருகின்றனர். (இ-7)

## 13 மில்லியன் ரூபா பெறுமதியான

## கொக்கெய்ன் மாத்திரைகளுடன் பிரேஸில் பிரஜை நேற்றுக் கைது

(கொழும்பு)

சுமார் 500 கிராம் நிறையுடைய 60 கொக்கெய்ன் மாத்திரைகளுடன் கட்டார் நாட்டிலிருந்து இலங்கையை வந்தடைந்த ஒருவரை நேற்றுக்காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கப்பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் பிரேஸில் நாட்டுப் பிரஜை எனவும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட கொக்கெய்ன் மாத்திரைகள் 13 மில்லியன் ரூபா பெறுமதியானவை எனவும் சுங்கப் பிரிவு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## வாகனத்தின் வேகத்தைக் குறைக்க பொலிஸாரின் புதிய கண்டுபிடிப்பு





(கொழும்பு)

போக்குவரத்து சட்டங்களை மீறி வேகமாக பயணிக்கும் வாகனங்களின் வேகத்தை குறைக்க பொலிஸார் புதிய கண்டுபிடிப்பு ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

முந்தலம பொலிஸாரால் இந்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முந்தலம பொலிஸ் பிரிவிற்கு சொந்தமான வீதியில் பொலிஸ் அதிகாரிகளுக்கு சமமான உருவங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

புத்தளம் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியின் உத்தரவிற்கமைய புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் கிரியன்கல்லியில் இருந்து கரிக்கட்டி வரையான வீதியில் இவ்வாறு பொலிஸ் அதிகாரிகளின் உருவம் பதாகை பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனை பார்த்தால் பொலிஸ் அதிகாரிகள் நிற்பது போன்று காட்சியளிப்பதனால் வாகனங்களின் வேகம் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### உங்கள் படை தயாரா?

நமக்கென்று ஒரு படை வேண்டும். இந்தப் படையைத் திரட்டிக்கொண்டு போருக்குப் போகச் சொல்லவில்லை. இது ஒரு தற்காப்புப் படை என்று வைத்துக் கொள்ளுங்களேன்!

இன்றைய உலகில் எல்லாவற்றையும் தனித்து நின்று சமாளிப்பது கடினமான செயலாக இருக்கிறது. நமக்கு நல்ல துணை(கள்) தேவை.

ஆனால் பெரும்பாலும் நாம் இந்தக் கண்ணோட்டத்தில் சிந்திக்காமலும் தயாராகாமல் இருப்பதாலும் அந்த நேரத்தில் வீழ்த்தப்படுகிறோம்.

நமக்கு ஓர் எதிர்ப்பு; நமக்கு ஒரு பணச் சிக்கல்; நமக்கு ஓர் எதிர்பாராத இக்கட்டு; நம் வீட்டில் ஒரு நல்லது கெட்டது இவையெல்லாம் நமக்கெதிராய் உருவாக்கப்பட்ட போர்க்களங்கள். இத்தகைய நேரத்தில் கையும் ஓடாது. காலும் ஓடாது. ஒன்றும் புரியவும் புரியாது. காரணம் பரபரப்புக்கும் அவசரத்திற்கும் மூளையை மழுங்கடிக்கச் செய்யும் ஆற்றல் உண்டு.

எனவே இவர்கள் முன்னால் செல்பவர்கள். நம்முடன் எப்போதும் இருப்பவர்கள் யார் என்பது நம் அடுத்த சிந்தனை இவர்கள் நமக்குப் பக்கபலமாக இருப்பவர்கள். ஆபத்துக் காலத்தில் கைகளை உதறாதவர்கள்.

அடுத்ததாக பின்பலம் அல்லது பின்புலம். இத்தகைய ஆசாமிகள் நாம் சொல்கிறபடிச் செயற்படும் போர் வீரர்கள். இவர்களுக்குச் சிந்திக்கத் தெரியாது. ஆனால் நாம் என்ன சொன்னாலும் அதன்படி செய்யக் கூடியவர்கள்.

ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுங்கள். உங்கள் வட்டத்தில் இந்த மூன்று இரகத்திற்கும் ஆள் சேருங்கள். இவர்களைக் குறித்து வையுங்கள்.

அப்படியில்லாமல் திடீரென்று போர் தொடங்கியதும் ஆள் தேடுவதும் கவசம் தேடுவதும் சரிப்பட்டு வராது.

இந்த அணுகுமுறையில் நமக்குப் பல உண்மைகள் தெரியவரும். அதாவது ஒன்று நமக்கு இப்படிப்பட்ட ஆட்கள் ஏகப்பட்ட பேர் இருக்கிறார்கள் என்பது, இரண்டாவது இப்படி நமக்கு எவருமே இல்லை என்பது.

நமக்கு ஏகப்பட்ட பேர்கள் இருக்கிறார்கள் என்பது பெரிய பலம். இந்தப் பலம் நமக்கு நல்ல துணிவைக் கொடுக்கும்.


நமக்கு இப்படி எவரும் இல்லை என்றால் இவர்களைத் தயார் செய்யும் முயற்சியில் நாம் இறங்கத் தொடங்கிவிடுவோம்.


இந்த இரண்டின் மூலம் ஒரு பொதுவான நன்மை இருக்கிறது. அது நமக்கு எல்லோரும் வேண்டும் என்கிற உணர்வு நமக்கு ஏற்படும். இது எவரையும் பகைத்துக் கொள்ளாதே என்று நமக்குச் சொல்லித் தரும்.

இப்படி ஒரு படையை நாம் தயார் செய்து வைத்துக் கொண்டால் வாழ்வின் எந்தப் போராட்டக் களமாக இருந்தாலும் சரி ஊதி விடலாம் ஊதி!

**லேனா தமிழ்வாணன்**

# படகு மூழ்கியதில் 100 அகதிகள் பலி!







(லிபியா)

லிபியா அருகே அகதிகள் சென்ற படகு மூழ்கியதில் 100 அகதிகள் உயிரிழந்துள்ளனர். என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆபிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் பலர் உள்நாட்டு போர் மற்றும் பஞ்சத்தால் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் பெரிய படகு ஒன்றில் ஏராளமான அகதிகள் மத்திய தரைக் கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது படகின் இயந்திரப் பகுதி வெடித்துச் சிதறி நீரில் மூழ்கியுள்ளது.

இவ் விபத்தில் உயிரிழந்து சடலமாக மிதந்த 3 குழந்தைகளின் உடல்களை மீட்புக் குழுவினர் நேற்று முன்தினம் மீட்டுள்ளனர்.

விபத்து காரணமாக 100 அகதிகள் உயிரிழந்துள்ளனர்.

மேலும் நீரில் தத்தளித்த 350இற்கும் மேற்பட்டவர்கள் லிபிய கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர். (இ)

# சமயக் கல்வியை மேம்படுத்துவதற்கு அரசு அனைத்து வசதிகளையும் வழங்கும்

## ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி



(கொழும்பு)

இந்த யுகத்தின் தேவையாக உள்ள சமயக் கல்வியை மேம்படுத்துவதற்கு முடியுமான அனைத்து வசதிகளையும் அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மனிதன் என்ற வகையில் வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு சமயக் கல்வி ன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார். திஸ்ஸமகாராம வரலாற்று முக்கியத்துவமிக்க உத்தகந்தர புராதன ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற புண்ணிய நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவமிக்க உத்தகந்தர ரஜமகா விகாராதிபதி சங்கைக்குரிய தெனகம தம்மதஸ்சி நாயக்க தேரருக்கு சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ ரேவத கௌரவ பட்டத்துடன் சியாமோபாலி மகா நிக்காயவின் மல்வத்து பிரிவின் ருகுணு மாகம்பத்துவே உப தலைமை சங்கநாயக்க தேரர் பதவியை வழங்குவதை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி முதலில் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டார். விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தங்க வேலிக்கான தங்கத்தூண் பிரதிஷ்டை செய்யும் நிகழ்வும் ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அறநெறி பாடசாலை கட்டடத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி வெஹர விகாரை அபிவிருத்திக்காக அரசாங்கம் ஆரம்பித்த பௌத்த புனருத்தாரண நிதியத்தினூடாக குறைந்த வசதிகளையுடைய விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்கு விரிவான நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

விகாரைகளின் அபிவிருத்திக்கும் பிக்குகளுக்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கும் பௌத்த சாசன சேவைகளை பலப்படுத்துவதற்கும் எவ்வித குறைபாடும் இன்றி அதிகபட்ச அனுசரணையை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ)

# றோகண விஜேவீரவை முன்னிலைப்படுத்த ஆட்கொணர்வு மனு



(கொழும்பு)

ஜே.வி.பி.யின் நிறுவக தலைவரான றோகண விஜேவீரவை, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உத்தரவிடக் கோரி, அவரது மனைவி ஜராங்கனி விஜேவீர மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் ஆட்கொர்ணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

அத்துடன் விஜேவீரவை தடுப்புக் காவலில் இருந்து, விடுதலை செய்யுமாறு உத்தர விட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

1989ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி தனது கணவரான, றோகண விஜேவீர இலங்கைப் படையினரால், கைது செய்யப்பட்டதிலிருந்து, காணாமல் போயுள்ளார் என்றும், அவரது மனைவி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. அவர் இறந்துவிட்டாரா? இல்லையா? என்பது கூட குடும்பத்தினராகிய எமக்குத் தெரியாது.

நாங்கள் வெலிசறையிலுள்ள கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எமக்கு அச்சுறுத்தல் இருந்ததால், முன்னரே இந்த மனுவைத் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் ஜானக பெரேரா, கப்டன் காமினி ஹெற்றியாராச்சி, லெப். கருணாரத்ன, கேணல் லயனல்பலகல்ல, மேஜர் ஜெனரல் மில்டன் வணசிங்க, மேஜர் ஜெனரல் சிசில் வைத்திய ரத்ன, ரஞ்சன் விஜேரத்ன, ஜெனரல் சிறில் ரணதுங்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் தற்போது உயிருடன் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கைக் கடற்படைத் தளம் அம்பாந்தோட்டைக்கு மாற்றம்

## பிரதமர் அலுவலகம் தகவல்



(கொழும்பு)

இலங்கைக் கடற்படையின் தென்பிராந்திய தலைமையகம், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு இடம் மாற்றப்படும் என்று பிரதமர் செயலகம் அறிவித்துள்ளது.

"அம்பாந்தோட்டை துறைமுகத்தை எந்தவொரு இராணுவத் தேவைக்கும் பயன்படுத்த அனுமதிக்க முடியாது என்று சீனத் தலைவர்களுடனான பேச்சுக்களின் போது. பிரதமர் தெளிவாக கூறியுள்ளார்.

இந்நிலையில் இலங்கைக் கடற்படை, அதன் தென்பிராந்திய தலைமையகத்தை அம்பாந்தோட்டைக்கு மாற்றுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கைக் கடற்படையிடமே இருக்கும். துறைமுகத்தின் பாதுகாப்புக் குறித்து அச்சம் கொள்ள வேண்டியதில்லை.

அம்பாந்தோட்டையை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று சீனாவுக்கு இலங்கை அறிவித்துள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகம் வணிகத் தேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும் " என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எனினும், காலி துறைமுகத்திலுள்ள இலங்கைக் கடற்படையின் தென் பிராந்திய தலைமையகம் எப்போது அம்பாந்தோட்டைக்கு மாற்றப்படும் என்று இந்த அறிக்கையில் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாபொல நிதியத்தின் 440மில். ரூபா ஊழல்

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப்பிரிசில் வழங்கும் மகாபொல நிதியத்திலிருந்து 440 மில்லியன் ரூபா நிதி மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் சிக்கியுள்ளதாக ஊழல் எதிர்ப்பு முன்னணியின் ஏற்பாட்டாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடியினால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அது பல்வேறு துறைகளில் தாக்கம் செலுத்தியுள்ளது. ஆகவே பல்கலைக்கழக மாணவர்களின் புலமைப்பரிசில் வழங்கும் மகாபொல நிதியத்திலும் கை வைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் உயர்கல்வியமைச்சர் லலித் அதுலத் முதலியின் திட்டத்திற்கமைவாகவே மகாபொல புலமைப்பரிசில் நிதியம் அமைக்கப்பட்டது. ஆகவே அந்நிதியத்தினால் தெரிவு செய்யப்படும் மாணவர்ஒருவருக்கு தற்போது ஐயாயிரம் ரூபா வழங்கப்படுகிறது. குறித்த நிதியத்திற்கு கிடைக்கும் வட்டி மூலமே மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது.

எனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதி பிணைமுறி விவகாரத்திற்கு பெறப்பட்ட காலப் பிரிவிலேயே மகாபொல புலமைப்பரிசில் நிதியத்திலிருந்தும் நிதி பெறப்பட்டுள்ளதாக ஊழல் எதிர்ப்பு முன்னணியின் ஏற்பாட்டாளர் கீர்த்தி தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# பாலியல் சேட்டை செய்தி பொய்

## மஹரகம பொலிஸ் மறுப்பு

(மஹரகம)

மஹரகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள வீடுகளில் தூங்கிக் கொண்டிருக்கும் பெண்களிடம் நள்ளிரவில் இனந்தெரியாத நபர்கள் சிலர் பாலியல் சேட்டைகளில் ஈடுபடுவதாக வெளியாகும் செய்திகளை அப்பகுதி பொலிஸார் மறுத்துள்ளனர்.

மஹரகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டெம்பல் வீதி மற்றும் கென்டாஹென பகுதிகளிலேயே நள்ளிரவில் சிலர் பெண்களிடம் பாலியல் சேட்டையில் ஈடுபடுவதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த மஹரகம பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி டி.எப்.மீதின் "இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை. இது பொய்யான செய்தி எனத் தெரிவித்தார். (இ)

# கதிர்காமம் காட்டுப்பாதை 4ஆம் திகதி திறக்கப்படும்



(கொழும்பு)

கதிர்காம ஆடிவேல் விழாவுக்குச் செல்லும் பாத யாத்திரிகர்களுக்கான காட்டுப்பாதை நாளை மறுதினம் 4ஆம் திகதி திறக்கப்பட்டு மீண்டும் ஜூலை 24ஆம் திகதி மூடப்படவுள்ளதாக ஆலய வணக்கர் ஜெ.டி.எம்.சூது நிலமே தெரிவித்தார்.


கதிர்காமம் புனித பாத யாத்திரையின் வனப்பகுதியின் ஆரம்ப இடமான உகந்தை முருகன் ஆலயப் பகுதியில் அனைத்து ஏற்பாடுகளும்பூர்த்தியாகியுள்ளன.

செல்வச்சந்நிதி முதல் பாணம வரையான 510 கிலோ மீற்றர் தூர பயணம் நகரங்கள் மற்றும் கிராமங்களை ஒட்டியதாகவுள்ளது.

மீதமுள்ள 90 கிலோ மீற்றர் தூரம் மிக அடர்ந்த வனப்பகுதியாகும். பாணம முதல் கதிர்காமம் வரையான வனப்பகுதியில் உகந்தை, குணம,யால, பறவை தீவு, கட்டகாமம், வீரச் சோலை, கதிர்காமம்" ஆகியன மிக அடர்ந்த வனப் பகுதியாகும்.

இதில் வனப்பகுதியின் ஆரம்ப இடமான உகந்தை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் மட்டுமே சுமார் ஒரு வார காலம் யாத்திரிகர்கள் தங்கியிருப்பர்.

இவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், மலசலகூட வசதிகள், மருத்துவம், பாதுகாப்பு, போக்குவரத்து, தங்குமிடம் போன்ற வசதிகளை மேற்கொள்ள சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (இ)



யாழ்ப்பாணம் வண்ணை. அரசடி விநாயகர் ஆலயத்தின் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. (படங்கள்:ஈச்சமோட்டை செய்தியாளர்)

# ரூ.25,000 அபராதம்; பேச்சுவார்த்தை இன்று

(கொழும்பு)

போக்குவரத்து விதி மீறல்கள் சிலவற்றுக்கு 25,000 ரூபா அபராதம் விதிப்பது சம்பந்தமாக சட்ட வரைவு திணைக்களத்திற்கும் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று திங்கட்கிழமை இந்த கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதாக வீதிப் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

25,000 ரூபா அபராதம் விதிப்பது சம்பந்தமாக, சட்ட வரைவு திணைக்களத்தால் திருத்தங்கள் செய்யப்பட்டு போக்குவரத்து அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் போக்குவரத்து அமைச்சர் கையொப்பமிட்ட பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏழு வகையான போக்குவரத்து விதிமீறல் குற்றங்களுக்கு இந்த அபராதம் விதிக்கப்படவுள்ளதுடன், அதற்காக மோட்டார் வாகன கட்டளைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 2 (சந்திரன்)**
**(சமூதாயச் சிற்பிகள்)**

தன்னிடம் பயம் கொள்பவர்களிடம் வீறாப்பாகப் பேசுவார்கள். தன்னைத் தட்டிக் கேட்பவர்களைக் கண்டால் நமட்டுச் சிரிப்புடன் நழுவிச் சென்றுவிடுவர்.

பொதுவாகவே ஏதாவது தேவையில்லாத விடயத்தில் வலிய போய்ச் சிக்கிக் கொள்வார்கள். மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்லும் இவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருளைத் தேடிக் கொள்ளாமல் யோசனையிலேயே ஆழ்ந்து நொந்து போவார்கள். திட நம்பிக்கை கொண்ட 2 ஆம் எண்காரர்கள் போல பிரசித்தி பெற்றவர்கள் எவரும் இருக்க முடியாது. ஒழுக்கமற்றவர்களின் சேர்க்கை இவர்களையும் ஒழுக்கமற்றவர்களாக்கிவிடும். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று வாதிடுவதில் வல்லவர்கள். பொது வாழ்க்கையில் புகழ்மிக்க இவர்கள் அழுக்குப்படாமல் சம்பாதிக்க வேண்டுமென்று எண்ணுவார்கள், கடன்பட்டாவது, கொள்ளையடித்தாவது, எவரையாவது மோசம் செய்து வஞ்சித்தாவது தமது வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள வேண்டும் என்று சிலர் நினைப்பார்கள்.

எதைச் செய்தாலும் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசக்கூடியவர்கள். சில நேரத்தில் வசதியைத் தேடிக் கொலை செய்யவும் அஞ்சமாட்டார்கள். எத்தருக்கு எத்தராகவும் பித்தருக்கு பித்தராகவும் நடிப்பதில் வல்லவர்கள். மற்றவர்களை பிளாக் மெயில் செய்து மிரட்டியே வாழ்வதில் திறமையானவர்கள். பொய்தான் சத்தியம் என்று போக்கற்று வாழ்கின்ற மனிதர்களோடு இவர்கள் சேரக்கூடாது. மற்றவர்களுக்குப் புத்திசாலித்தனமான யோசனைகள் கூறுவார்கள். மன ஓட்டப்படியே வாழ்க்கை வாழ்வார்கள். உழைத்து உண்ணும் எண்ணம் இவர்களிடம் இல்லை. எப்படியோ வசதியாக வாழ வேண்டும். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்று லட்சியப் போக்குடையவர்கள் இவர்கள்தான். கற்பனைகளை தன்வசமாக்கி சிறந்த கவிஞராகவோ கதாசிரியனாகவோ வாழ்கின்றனர். கற்பனை வசப்பட்டு அதற்கே அடிமையாகி விட்டவர்கள் பைத்தியமாகி விடுகின்றார்கள். கடுகளவு கஷ்டம் என்றாலும் அதனை பூசணிக்காய் அளவு பெரிதாக்கி விடுவார்கள். நீர்க் கண்டங்களை அடிக்கடிச் சந்திக்க நேரிடும். சந்தேகப் பேர்வழிகள்.

நேர்மையும் நாணயமும் ஏற்படுமானால் பலருடைய உதவிகள் இவர்களுக்குக் கிடைக்கும். இவர்களுக்குப் பெண் சேர்க்கையால் அவ்வளவு இலாபமிராது . பெண்களால் இவர்களுக்கு இன்னலேயன்றி இன்பமில்லை. காதல் திருமணம் செய்து கொண்ட பலபேர் நீதிமன்றம் சென்று விவாகரத்து கேட்கின்றனர்.




பெண் தன்மை அதிகமிருக்கும். சாந்தம், அன்பு நிறைந்தவர்கள். நிலையற்ற தன்மை உடையவர்கள். மாதத்தில் பாதி நாட்கள் வளர்ச்சி பாதி நாட்கள் தளர்ச்சி என்று மாறி மாறி வரும் தன்மை உடையது சந்திரன். அதைப் போலவே இவ்வெண் நபர்களும் காணப்படுவார்கள். எண்ணங்களில் எப்போதும் ஊசலாட்டம் காணப்படும். பிறரைச் சார்ந்தே வாழ்க்கை நடத்துவார்கள். எடுத்த முடிவுகளிலிருந்து அடிக்கடி மாறுவார்கள். மனம், உணர்வுகள், ஆழ்மனம் போன்றவற்றை ஆள்வது சந்திரனின் ஒளிக்கிரணமே!

சந்திர ஆதிக்கத்தினர் உடல் அமைப்பு, உணவு நோய் மற்றும் மருத்துவ முறைகள்

சந்திரன் வளர்வதும் தேய்வதும் மாய சக்தி படைத்த கிரகமாகும். இவர்களின் மனம் எப்போதும் ஒருவித மாய சக்தியால் கவர்ந்திழுக்கப் படக்கூடிய வசியக் குணமுடையது. சந்திர ஆதிக்கம் அதிகமானவர்கள் உயரமாகக் காட்சியளிப்பார்கள். ஆதிக்கக் குறைவுள்ளவர்கள் குறைந்த உயரமுடையவர்கள். இவர்கள் உடலில் நீர்ச்சத்து நிறைந்து காணப்படும். உடலின் அனைத்துப் பாகங்களும் நீர் நிரம்பியது போலவே சதைப்பற்று நிரம்பிக் காணப்படும். உடல் பருமனுக்குத் தகுந்த பலமிருக்காது. வட்ட வடிவ முகமும் பூமி போன்று உருண்டையான தலையும் இருக்கும். வசீகரமான கண்கள் கவர்ந்திழுக்கும் ஆற்றலுடன் இருக்கும். கன்னங்கள் சதைப்பற்றுடன் பருத்துக் கடித்துத் தின்னலாம் போல இருக்கும். கண் இமை மற்றும் கன்னங்கள் சதைப்பற்றுக் கூடியிருக்கும். பற்கள் விரிந்து இருக்கும். மூக்கின் நுனி சதைப் பற்றுடன் கூடி இருக்கும். சதையுடன் கூடிய கழுத்து இருக்கும். நீர்ப்பதார்த்தங்களை விரும்பிப் புசிப்பார்கள். திரவ ஆகாரங்களைப் பெரிதும் விரும்பி உண்பார்கள். கண்கள் பேசும். இளம் வயதிலேயே தொந்தி, நரைமுடிகள் வந்துவிடும். பகல் தூக்கம் தூங்குவார்கள். மன தில் பயம் கலந்திருக்கும். கற்பனைகள் மனதைக் கவர்ந்திழுக்கும். வெளிப்பேச்சுத் தைரியமாகத் தெரியும். உள்ளுக்குள் பயந்தவர்கள். இவர்கள் அங்க அசைவுகள் பிறருக்குத் தொற்றிக் கொள்ளும்.

சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் தொழில்கள்

தீவிரமாக உழைக்கக் கூடிய இவர்கள் கால் பதிக்காத துறைகளே இருக்காது என்று கூறுமளவிற்கு அனைத்துத் துறைகளிலும் சிறப்பாகச் செயற்படுவார்கள். அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளையும வகிப்பார்கள்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. தேர்தலில் ரஷ்யா தலையீடு

## புடினுடனான சந்திப்பில் ட்ரம்ப் பேசுவாராம்



(வோஷிங்டன்)

புடினுடனான சந்திப்பின் போது அமெரிக்கத் தேர்தலில் தலையீடு குறித்து பேச இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு இருந்ததாக புகார் எழுந்தது. இது குறித்து ராபர்ட் முல்லர் தலைமையிலான குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த குற்றச்சாட்டை ஆரம்பத்தில் இருந்தே மறுத்து வரும் ட்ரம்ப், விசாரணை ஆணையத்தை குறைகூறி வருகிறார். இந்த புகாரை ரஷ்யாவும் தொடர்ந்து மறுத்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடினை எதிர்வரும் 16 ஆம் திகதி பின்லாந்து தலைநகர் ஹெல்சின்கியில் ட்ரம்ப் சந்தித்து பேசுகிறார்.

இந்த சந்திப்பின் போது, அமெரிக்க தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு குறித்து பேசுவீர்களா? என ட்ரம்பிடம் நேற்று முன்தினம் நிருபர் கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில், 'நான் அவரிடம் அனைத்து விஷ யங்கள் குறித்தும் பேசுவேன். தேர்தல்கள் குறித்தும் நாங் கள் பேசுவோம். அமெரிக்க தேரதலை யாரும் சீர்குலைப்பதை நாங்கள் விரும்பவில்லை' என்றும் தெரிவித்தார்.

உக்ரைனை இணைத்துக் கொண்டது, சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத்துக்கு ஆதரவாக போரில் ஈடுபட்டு வருவது போன்ற ரஷ்யாவின் நடவடிக்கைகளை அமெரிக்கா தொடர்ந்து எதிர்த்து வரும் நிலையில், புடினுடனான சந்திப்பில் இந்த விடயங்கள் குறித்தும் பேச இருப்பதாக ட்ரம்ப் தெரிவித்தார்.

இதேவேளை ஐரோப்பிய யூனியன் உள்ளிட்ட நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கு வரிவிதிப்பது குறித்து 3 அல்லது 4 வாரங்களுக்குள் முடிவு எடுக்கப்படும் என்று கூறிய ட்ரம்ப், உலக வர்த்தக அமைப்பில் இருந்து விலகுவது குறித்து ஆலோசித்து வருவதாக வெளியான செய்திக்கு மறுப்பு தெரிவித்தார். (இ)

# தூரநோக்குள்ள திட்டங்களை முன்னெடுத்து பிரச்சினைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணலாம்

## டக்ளஸ் எம்.பி.வேலணையில் வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

மக்களின் தேவைகளை அறிந்து சிறப்பானதும் தூரநோக்குள்ளதுமான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதனூடாகவே மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும்.

அந்தவகையில் எமது மக்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடனேயே நாம் நீண்டகாலமாக பல இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அயராது பாடுபட்டு வருகின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.

வேலணையிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் கட்சியின் வேலணை பிரதேச ஆலோசனை சபை உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் நாம் பல்வேறுவகையான அபிவிருத்தித் திட்டங்களையும் கட்டுமானங்களையும், மக்கள் நலன்சார் திட்டங்களையும், தொழில் வாய்ப்புக்களையும் எமது மக்களுக்காக பெற்றுக்கொடுத்து வறுமையில் வாடிக்கிடந்த எமது மக்களுக்கு நிறைவான ஒரு வாழ்க்கை நிலையை எமக்கு கிடைத்த அரசியல் பலத்திற்கு ஏற்றவகையில் உருவாக்கிக் கொடுத்து சாதித்துக் காட்டியிருக்கின்றோம். ஆனால் இன்று அவ்வாறான ஒரு சூழ்நிலை எம்மிடம் குறைவாக காணப்படுகின்றது.

தற்போது எமது கட்சி முழுமையான மக்கள் மயப்படுத்தப்பட்ட கட்சியாக மாற்றங் கண்டுள்ளது. மக்கள் தேவைகளை முழுமையாக அறிந்து ஆரோக்கியமான செயற்றிட்டங்களை நாம் மேலும் வலுவான முறையில் இதனூடாக மேற்கொள்ள முடியும்.

அதற்கான செயற்பாடுகளை நாம் ஒவ்வொருவரும் கட்சி நலன்களைப் பாதுகாப்பதுடன் மக்கள் நலன்களை முன்னிறுத்தியதான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து எமது மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கி அவர்களது வாழ்வாதாரங்களை முன்னெடுக்க நாம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பின்போது வேலணை பிரதேச குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு மற்றும் மக்களது வாழ்வாதார தேவைப்பாடுகள் உள்ளிட்ட பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

இதன்போது கட்சியின் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளர் கா.வேலும்மயிலும் குகேந்திரன் உடனிருந்தார். (இ)

# ஆட்டோ-லொறி விபத்து

## நால்வர் படுகாயம்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊறணி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை மட்டக்களப்பு-வாழைச்சேனை பிரதான வீதியில் ஊறணி பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றின் மீது வேகமாக வந்த ஆட்டோ மோதியே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின் போது ஆட்டோச் சாரதி உட்பட நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் இவர்களுள் ஒருவரது நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1452

Search for people, places and things Nagendram Home

### ரக்ஷிதா

நீ சிரித்துப் பார் உன்
முகம் உனக்குப் பிடிக்கும்



மற்றவர்களை சிரிக்க வைத்துப் பார்
உன் முகம் எல்லோருக்கும் பிடிக்கும்...

### ராகுலன்

டாக்டர் எனக்கு அடிக்கடி முன்கோபம் வருது...
எவ்வளவு நாளா இப்படி இருக்கு...?



எவ்வளவு நாளா இருந்தா உனக்கென்னடா முண்டம்
டாக்டர்:..........

### ராணி

உயர்ந்து நிற்கும் மரமெல்லாம் என்றோ
ஒருநாள் விதைகளாக மண்ணில் விழுந்தவையே



### ஐஸ்வர்யா

உங்களுக்கு மதிப்பில்லை என்று கருதும்
இடங்களில் மௌனமாக இருங்கள்...



காலப்போக்கில் உங்கள் மௌனம்
உங்களுக்கான மதிப்பை அங்கே ஈட்டித்தரும்...!

### ஜஸ்மினி

ஒருவரை வெறுத்து ஒதுக்கிய பின்னரும்
அவரிடமிருந்து அதே அன்பு
தொடர்ந்து கிடைக்குமானால்



நாம் தவறிவிட்ட பெரும் புதையல் அவர்கள்

### ஜானுயா

மறக்க வேண்டியவற்றை நினைத்து வருந்துவதும்



நினைக்க வேண்டியவற்றை மறந்து விடுவதும்தான்
துன்பங்களுக்குக் காரணம்...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளத்தாக்கில் கவிழ்ந்த பேருந்து; 50 பேர் உயிரிழப்பு! 11 பேர் படுகாயம்

(டேராடூன்)

இந்தியாவின் உத்தர காண்ட் மாநிலத்தின் நைனி தண்டா பகுதியில் பேருந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்த விபத்தில் பலி எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ள நிலையில். உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு தலா ரூ.2 இலட்சம் நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது.






உத்தரகாண்ட் மாநிலத்தில் நைனிதண்டா பகுதியில் நேற்றுக் காலை பௌனில் இருந்து ராம்நகர் பகுதிக்கு சென்று கொண்டிருந்த பேருந்து எதிர்பாராத விதமாக சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரம் இருந்த பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது.

சுமார் 60 அடி ஆழம் கொண்ட பள்ளத்தாக்கில் பேருந்து கவிழ்ந்ததில், 50 பயணிகள் உயிரிழந்துள்ளதாகவும், 11 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள அம் மாநில முதல்வர் திரிவேந்திர சிங் ராவத், தலா ரூ.2 இலட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார். (இ)

## ஏவிய சில நொடிகளில் வெடித்து சிதறிய ராக்கெட்

### ஜப்பானில் சம்பவம்



(டோக்கியோ)

ஜப்பானில் தனியார் நிறுவனம் ஒன்று விண்ணில் செலுத்திய 10 மீற்றர் நீளம் கொண்ட ரொக்கெட் சில நொடிகளில் வெடித்து சிதறியது.

ஜப்பானில் பிரபல லிவ் டோர்ஸ் இன்டர்நெட், விண்வெளி தொழில்நுட்பம் சார்ந்த தொழில் நிறுவனத்தை நடத்தி வருகிறது. தகாபுமி ஹோரி அதன் நிறுவனர் ஆவார்.

இந்த தனியார் நிறுவனம்முதன்முறையாக 'மொமொ-2' என்ற ரொக்கெட்டை தயாரித்தது. அதை நேற்று முன்தினம் உள்ளூர் நேரப்படி மாலை 5.30 மணியளவில் விண்ணில் செலுத்தியது.

கொகைடோ தீவிலுள்ள தைகி சோதனை தளத்திலிருந்து இந்த ரொக்கெட் ஏவப்பட்டது. விண்ணில் சீறிப் பாய்ந்த ரொக்கெட் சில விநாடிகளில் வெடித்து சிதறியது.

வெடித்த ரொக்கெட் 10 மீற்றர் நீளம் கொண்டது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு ஜூலை மாதம் இந்நிறுவனம் ஒரு ரொக்கெட் அனுப்பியது. ஆனால் அதுவும் தோல்வியில் முடிந்தது.

அப்போது ஏவப்பட்ட சில நிமிடங்களில் ரொக்கெட்டின் கட்டுப்பாட்டையிழந்து விட்டனர். தற்போது 2 ஆவது தடவையாக ஏற்பட்ட தோல்வியால் இந்நிறுவனத்துக்கு மிகப் பெரிய பின்னடைவு ஏற்பட்டு ள்ளது.

இதைப்பற்றி இந்த நிறுவனம் கவலைப்படவில்லை. அண்மையில் ஏற்பட்ட தோல்வியை ஆய்வின் மூலம் சரி செய்து மீண்டும் ஒரு ரொக்கெட்டை விண்ணில் செலுத்துவோம் என அறிவித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தின் உரிமையாளர் ஹோரி மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலுக்காக வேலைசெய்யும் கட்சி இல்லை-கயந்த

(கொழும்பு)

எந்தவொரு உரிமை பத்திரமும் அற்ற பல அரச நிறுவனங்கள் இருப்பதாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

காலி, பத்தேகம பகுதியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எந்தவித உரிமை பத்திரமும் அற்ற 12,000 அரச நிறுவனங்களுக்கு உடனடியாக உரிமை பத்திரத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

12,000 அரச நிறுவனங்கள் உரிமைப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சி தேர்தலை எதிர்பார்த்து வேலை செய்யும் கட்சி இல்லை எனவும் அது எதிர்காலத்தை எண்ணி மக்களுக்கு சரியான தீர்ப்பை வழங்கும் கட்சி என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## GMOA வின் தலைவராக அனுருத்த பாதெனிய தெரிவு

(கொழும்பு)

8 ஆவது முறையாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உட்பட மத்திய செயற்றிட்ட குழுவிற்கு அனுருத்த பாதெனிய தலைமையிலான அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒன்றுகூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கூட்டத்தின் போது இவர்கள் தெரிவு செய்யப்பட்டதாக சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

போட்டியில்லாமல் இந்த தெரிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இலங்கையில் நாற்பது வீத கட்டுமானப் பணிகள் சீனாவின் கையில்-70 வீதத்தை கைப்பற்ற குறி

(கொழும்பு)

இலங்கையில் நாற்பது வீத கட்டுமானத் திட்டங்களில் சீன நிறுவனங்களே ஈடுபட்டுள்ளதாக, இலங்கைக் கட்டுமான நிறுவகத்தின் தலைவர் கலாநிதி ரொகான் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.


"சீனாவின் அனைத்துலக ஒப்பந்தகாரர் சங்கம், இலங்கையில் 40 வீதமான கட்டுமானப் பணிகளை மேற்கொள்கிறது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் சீனாவின் அனைத்துலக ஒப்பந்தகாரர் சங்கம், இலங்கையில் கட்டுமானத் தொழில்துறையில் தமது பங்கை 70 வீதமாக அதிகரிக்கவுள்ளது. இதனால் எமது உள்ளூர் நிறுவனங்கள் பாதிக்கப்படும்.

அதனால் சீனாவின் அனைத்துலக ஒப்பந்தகாரர் சங்கத்துடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் கையெழுத்திட்டுள்ளோம்.

இலங்கையில் கட்டுமானத் திட்டங்களின் போது, உள்ளூர் நிறுவனங்களுடன் அதனைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் இந்த உடன்பாடு கையெடுத்திடப்பட்டுள்ளது. இதனால் ஆபத்து குறைக்கப்பட்டு விட்டது.

அத்துடன், எந்தவொரு நாட்டினதும்,வெளிநாட்டு நிறுவனங்கள் கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் போது, ஒரு இலங்கை பங்காளரை வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும், அமைச்சரவைப் பத்திரம் ஒன்றும் சமர்ப்பிக்கப்படவுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (இ)







தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் , சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜெ.சிவானந்தராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- ஈச்சமோட்டை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிலிருந்து வெளியேறிய எம்.பிக்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை இல்லை!

## சுதந்திரக் கட்சி செயலர் பியதாஸ



(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து வெளியேறியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 பேர் கொண்ட அணிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என அக்கட்சியின் செயலாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷமன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய அவர்கள் இதுவரையில் கட்சியின் சகல நடவடிக்கைகளிலும் பங்கெடுத்தே வருகின்றனர். எனவே அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்குழுவினர் கூட்டு எதிர்க் கட்சியின் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டங்கள் எதிலும் கலந்து கொள்ளாதிருப்பதற்கும் தீர்மானம் எடுக்கப் போவதாக முன்னாள் அமைச்சர் ரி.பீ ஏக்கநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மைத்திரியின் மகனின் காதலியிடம் சிக்கிய கோடிக்கணக்கான பணம்!

## மறைக்கப்பட்ட மர்மம் என்ன?

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேனவின் காதலியிடம் 15 கோடி ரூபாவுக்கும் அதிக வெளிநாட்டு பணம் சிக்கியதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது பொது வேட்பாளராக போட்டியிட்ட சமயத்தில் இந்த பணம் சிக்கியது.

இந்தப் பணம் தொடர்பில் பல்வேறு செய்திகள் வெளியாகிய போதிலும் அதற்கு என்ன நடந்ததென்பது இரகசியமாகவுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் தஹாம் சிறிசேனவின் காதலியின் தந்தையை கைது செய்வதற்கு குற்றவிசாரணை திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்தது.

அதற்கமைய நுகேகொடை ரயில் வீதியில் வசிக்கும் அத்துல ரோஹண வீரரத்ன என்பவர் கைது செய்யப் படவுள்ளதாக குறித்த காலப் பகுதியில் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று ஜனாதிபதியாதன் பின்னர் அந்தப் பணத்திற்கு என்ன நடந்ததென்பது தொடர்பில் தகவல் வெளியாகவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலுக்காக சீன நிறுவனத்திடம் பணம் பெற்றுக் கொண்டதாக சர்வதேச ஊடகம் வெளிப்படுத்தியதனை தொடர்ந்து மகிந்த தரப்பு ஊடகங்கள் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளன. (இ)

# கொழும்பில் ஒரே இடத்தில் சிக்கிய 17 பாம்புகள்

## அதிர்ச்சியடைந்த அதிகாரிகள்

(கொழும்பு)

கொழும்பில் சுமார் 17 பாம்புகளை ஒரே இடத்தில் சட்டவிரோதமாக வைத்திருந்த நபர் ஒருவரினால் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவர் நாகப் பாம்பு உட்பட 17 வகை பாம்புகளை வைத்திருந்த நிலையில் கைது செய்யப் பட்டார்.பின்னர் சந்தேக நபர் புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் அவர் 50000 ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இருப்பினும் சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி இந்த வழக்கு விசாரிக்கப்படவுள்ளது.

வழக்கு விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த பாம்புகள் அனைத்து தெஹிவளை தேசிய பூங்காவில் ஒப்படைப்பதற்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

# கொழும்பு பல்கலைக்கழக விடுதி அம்பாந்தோட்டையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான 100 அறைகளைக் கொண்ட விடுதி ஒன்று அம்பாந்தோட்டை வெலிகத்த பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க கணக்கு தொடர்பான செயற்குழு அறிக்கையில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வெலிகத்த பிரதேசத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் பீடத்திற்கான கட்டட திட்டம் ஒன்று இருந்த போதிலும், 219 மில்லியன் ரூபா செலவிட்டு அந்த கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

100 அறைகளைக் கொண்ட இந்த விடுதி நிர்மாணிப்பு நடவடிக்கை 2013ஆம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனினும் பல்கலைக்கழகத்தின் உயிரியல் பீடத்தை நிர்மாணிக்காமல் இருப்பதற்கு தீர்மானித்ததனை தொடர்ந்து இந்த விடுதி பலனற்று போயுள்ளது.

உயிரியல் பீடமின்றி விடுதி நிர்மாணிக்கப்பட்ட விடயம் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்களே அப்போதைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக செயற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. (இ)

# திரைப்படத் துறையினருடன் சட்டவிரோத ஒப்பந்தங்கள்

(கொழும்பு)

திரைப்பட கூட்டுத்தாபனத்திற்கும் நிறுவனங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் சட்டவிரோதமானது என்று உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய திரைப்படத்துறை பாரிய பிரச்சினையை எதிர்நோக்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

சகல தரப்புகளுடனும் கலந்துரையாடி இலங்கையின் திரைப்படத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை குறுகிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

திரைப்பட துறையின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இனங்காணப்பட வேண்டியது அவசியமாகும். 2000 ஆம் ஆண்டு முதல் நான்கு நிறுவனங்களுக்கு மாத்திரமே திரைப்பட ஒளிபரப்புக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த ஏகபோக உரிமையால் திரைப்பட துறைக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. திரைப்பட கூட்டுத்தாபனத்திற்கும் இந்த நிறுவனங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் சட்டவிரோதமானது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# செய்தித்துளிகள்

## கூடிய விலையில் நெல்லை கொள்வனவு செய்ய திட்டம்

(கொழும்பு)

பெரும்போக நெல் அறுவடையின் போது, நாட்டரிசி ஒரு கிலோகிராம் 38 ரூபாய்க்கும், சம்பா ஒரு கிலோ கிராம் 42 ரூபாய்க்கும், கொள்வனவு செய்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான அமைச்சரவைக்கு குழுவின் அனுமதிக்கான பத்திரத்தை, நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ)

## 2024-ம் ஆண்டில் பூர்த்தியாகும் ரயில்வே நிர்மாணப் பணிகள்

(கொழும்பு)

மாலபேயிலிருந்து புறக்கோட்டை வரையிலான ரயில்வே திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2024 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இந்த விடயத்தை ரயில்வே திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆயிரத்து 800 மில்லியன் ரூபா செலவிடப் படவுள்ளது. அத்துடன் ஜெய்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (இ)

## சகோதரப் படுகொலை!

(கொழும்பு)

அம்பாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமனலகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளதாக அம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 41 வயதுடையவர் எனவும் 43 வயதுடைய அவரது சகோதரரே மேற்படி தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டவர் எனவும் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை கைது செய்த அம்பாந்தோட்டை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## வெலிக்கடை சிறையில் தலதா



(கொழும்பு)

நீதி அமைச்சர் தலதா அத்துகோரள நேற்று முன்தினம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு விஜயம் செய்தார். இதன்போது கைதிகளை சந்தித்துப் பேசிய அமைச்சர் தலதா, கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இட நெருக்கடி தொடர்பாகவும் சிறைச்சாலை அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். (இ)

## மின்சாரம் தாக்கி ஒருவர் பலி

(திருமலை)

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிந்தபுர பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு நேற்றுக் காலை உயிரிழந்தவர் 65 வயதுடைய சேருநுவர காவன்திஸ்ஸபுர பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். இவரது சடலம் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## அவதானத்துடன் செயற்படுங்கள்

(ஏறாவூர்)

கிழக்கு, ஊவா, மத்தி மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நேற்றுத் தொடக்கம் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய பலத்தமழை பெய்யும் என்பதோடு வேகமாக காற்று வீசும் என்பதால் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு வானிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதவிக்கு அளவுண்டு



உஜ்ஜெனியில் ஒரு அந்தணர் தன் மனைவியுடன் வசித்தார். கோவில்களில் பூஜை செய்வது அவரது பணி.

ஒருமுறை அவ்வூரில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் சாப்பிடவே வழியில்லாத நிலையில் தவித்ததால், கோவிலுக்கு செலவழிக்க பணமில்லாமல் அந்தப்பக்கம் தலை வைக்கவே இல்லை.

அந்தணர் பசியால் வாடினார். அவரது மனைவி மயக்க நிலைக்கே போய்விட்டாள்.

வேறுவழியின்றிபிழைப்புக்காக மனைவியுடன் வெளியூர் புறப்பட்டார். வழியில் ஒரு பாகன் யானைக்கு கொள் கொடுத்துக் கொண்டிருந்தான். அதையே அவனும் சாப்பிட்டான். அந்தணர் அவனிடம், “தம்பி! நானும் என் மனைவியும் சாப்பிட்டு பல நாட்கள் ஆகிறது.

எனக்கும் கொஞ்சம் கொள் கொடு. நாங்களும் சாப்பிட்டு சற்று பசியாறுவோம்” என்றார்.

பாகன் அவரிடம், “சுவாமி! மன்னிக்க வேண்டுகிறேன். இதை நான் எச்சில் செய்து விட்டேன். அந்தணர்களுக்கு எச்சில் உணவை அளிப்பது முறையில்லையே!” என்றான்.

“பரவாயில்லை! ஆபத்து காலத்தில் மனிதன் தர்மத்தை சற்றே வளைத்து தப்பித்து கொள்ளலாம்.

இதை “ஆபத்தர்மம்” என்பர். பசியால் நாங்கள் இறக்கும் நிலைக்கு வந்து விட்டோம்.

உயிர் பிழைக்க இதை சாப்பிட்டுக் கொள்கிறோம்” என்றார் அந்தணர். அவர் சொன்னதைக் கேட்ட பாகன் தன்னிடமிருந்த கொள்ளை அவரிடம் கொடுத்தான்.

அதுவரையில் சாப்பிட்டிராத புதிய உணவை அவர்கள் சாப்பிட்டனர். அப்போது விக்கல் ஏற்பட்டது.

பாகன் தன்னிடமிருந்த தோல் பையை நீட்டி, “இதிலுள்ள தண்ணீரைக் குடியுங்கள்” என்றான்.

“தம்பி! எச்சில்பட்ட கொள்ளை சாப்பிட்டது உயிரைத் தக்க வைக்க! அது காப்பாற்றப்பட்டு விட்டது.

இனி தர்மப்படி எச்சில்பட்ட தண்ணீரைக் குடிக்கக்கூடாது. மேலும் ஒருவரை மீண்டும் மீண்டும் தொந்தரவும் செய்யக் கூடாது. நாங்கள் வேறு இடம் சென்று தண்ணீர் குடித்துக் கொள்கிறோம்” என்றபடியே தண்ணீர் இருக்கும் இடத்தைத் தேடி மனைவியுடன் நகர்ந்தார்.

இக்கட்டான நிலையில் ஒருவரிடம் எப்போதாவது உதவி கேட்கலாம். ஆனால்அதையே வாடிக்கையாக வைத்துக் கொள்ளக்கூடாது. அப்படி செய்தால் உதவி செய்தவருக்கு எரிச்சல் ஏற்பட்டு மற்றவர்களுக்கு உதவுவதைக் கூட நிறுத்தி விடுவார். உதவி பெறுவதற்கும் அளவுண்டு. புரிகிறதா!




- ❖ 455-உரோம் நகரம் வன்முறையாளர்களால் இரண்டு வாரங்களுக்கு முற்றுகையிடப்பட்டு சூறையாடப்பட்டது.
- ❖ 1615-பிரெஞ்சு கத்தோலிக்க மதப்பரப்புநர்களின் முதற்தொகுதியினர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தனர்.
- ❖ 1805-நெப்போலியப் போர்கள்: பிரெஞ்சு–ஸ்பானியக் கடற்படையினர் பிரித்தானியரிடம் இருந்து பிரான்சுக் கோட்டைக்குச் செல்லும் வழியில் டயமண்ட் குன்று என்ற ஆளில்லாத் தீவைக் கைப்பற்றினர்.
- ❖ 1835-பி.டி. பர்னம் ஐக்கிய அமெரிக்காவிற்கான தனது முதலாவது வட்டரங்கு சுற்றை ஆரம்பித்தார்.
- ❖ 1896-மார்க்கோனி தான் புதிதாகக் கண்டுபிடித்த வானொலிக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- ❖ 1919-அமெரிக்காவின் எட்டு மாநிலங்களில் அரசுக் கிளர்ச்சியாளர்கள் குண்டுகளை வீசினார்.
- ❖ 1924-ஐக்கிய அமெரிக்காவில் பிறந்த அனைத்து பழங்குடிகளுக்கும் அமெரிக்கக் குடியுரிமை வழங்கும் சட்டமூலத்தை அரசுத்தலைவர் கால்வின் கூலிஜ் அறிமுகப்படுத்தினார்.
- ❖ 1946-இத்தாலியில் முடியாட்சியைக் குடியரசாக மாற்றும் முடிவுக்கு மக்கள் பெருமளவு ஆதரித்து வாக்களித்தனர். இத்தாலியின் மூன்றாம் உம்பெர்த்தோ மன்னர் நாட்டை விட்டு வெளியேறினார்.
- ❖ 1953-இரண்டாம் எலிசபெத் பெரிய பிரித்தானியாவின் அரசியாக முடிசூடும் விழா முதற்தடவையாக தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.
- ❖ 1955-சோவியத் ஒன்றியமும் யுகோசுலாவியாவும் பெல்கிறேட் உடன்பாட்டின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே 1948 இல் அறுந்து போன உறவைப் புதுப்பித்தன.
- ❖ 1967-மேற்கு செருமனியில் ஈரானின் அரசுத் தலைவரின் வருகைக்கு எதிராக வன்முறை ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.
- ❖ 1999-பூட்டானில் முதற் தடவையாக தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

**பிறப்புகள்**

- ❖ 1840-தாமஸ் ஹார்டி, ஆங்கிலேய புதின எழுத்தாளர், கவிஞர் (இ. 1928)
- ❖ 1923-இலாயிடு சேப்ளி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கக் கணிதவியலாளர், பொருளியலாளர் (இ. 2016)
- ❖ 1942-டென்மார்க் சண், ஈழத்து திரைப்பட இசையமைப்பாளர்
- ❖ 1943-இளையராஜா, தென்னிந்தியத் திரைப்பட இசையமைப்பாளர்
- ❖ 1955-நந்தன் நிலெக்கணி, இந்தியத் தொழிலதிபர்
- ❖ 1955-மணிரத்னம், இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர்
- ❖ 1985-ஜாக்குலின் பெர்னாண்டஸ், இலங்கை-இந்தியத் திரைப்பட நடிகை

**இறப்புகள்**

- ❖ 1842-பி. கந்தப்பிள்ளை, யாழ்ப்பாணப் புலவர், வைத்தியர், நாவலரின் தந்தை. (பி. 1766)
- ❖ 1981-தாவீது அடிகள், ஈழத்துத் தமிழறிஞர் (பி. 1907)
- ❖ 1988-ராஜ் கபூர், இந்திய நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர் (பி. 1924)

**சிறப்பு நாள்**

- ❖ குழந்தைகள் நாள் (வடகொரியா)
- ❖ பன்னாட்டு பாலியல் தொழிலாளர் நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 50 | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 110 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 350 | 400 | 600 | 300 |
| தக்காளி | 200 | 300 | 240 | 240 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 35 | 50 | 40 | 40 |
| கோவா | 180 | 200 | 120 | 160 | 200 | 200 |
| கரட் | 220 | 400 | 220 | 320 | 400 | 300 |
| பூசணி | 40 | 40 | 20 | 40 | 40 | 30 |
| புடோல் | 80 | 120 | 90 | 100 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 40 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 200 | 100 | 120 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 95 | 110 | 120 | 120 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 300 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 150 | 80 | 120 | 90 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 65 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 100 | 160 | 100 | 120 | 160 | 120 |
| லீக்ஸ் | 300 | 400 | 240 | 250 | 300 | 260 |
| பீற்றூட் | 160 | 160 | 120 | 160 | 200 | 150 |
| கறிமிளகாய் | 220 | 400 | 140 | 200 | 400 | 320 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 460 | 700 | 600 | 700 |
| போஞ்சி | 300 | 400 | 150 | 240 | 300 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 45 | — | 80 | 70 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 35 | 50 | 20 | 15 |
| தேசிக்காய் | 60 | 50 | 70 | 100 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-60 | 25-50 | 75 | 50-70 | 70 |
| இராசவள்ளி | 160 | 200 | 140 | 180 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | 240 | 280 | 200 |
| முள்ளங்கி | 100 | 120 | 35 | 120 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 10 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 60 |
| ஈரப்பலா | 60 | 100 | 140 | 60 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கற்றவனுக்கு தெய்வமே துணை.
– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது

அண்மைக்காலமாக வட பகுதியில் நடந்து வரும் சம்பவங்களைப் பார்க்கும்போது வட பகுதி மக்களை அச்ச உணர்வில் வைத்திருப்பதனூடு,

அவர்களை இங்கிருந்து வெளியேற்றும் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றே எண்ணத் தோன்றும். அந்தளவுக்கு நிலைமை படுமோசமாகி வருகிறது.

மருதங்கேணியில் யானை தாக்கி ஒருவர் பலி, கிளிநொச்சி அம்பாள்புரத்தில் பலரையும் கடித்த சிறுத்தை கொல்லப்பட்டது என்ற செய்திகள், மருதங்கேணியில் யானையைக் கொண்டு வந்து விட்டது யார்? கிளிநொச்சி அம்பாள்புரத்துக்கு சிறுத்தை எவ்வாறு வந்தது என்ற வினாக்களை எழுப்பவே செய்யும்.

இதுதவிர, இப்போது வடபகுதியில் நடக்கின்ற சம்புவங்கள் மிகப்பெரிய பயங்கரத்தை ஏற்படுத்தியுள்ளன.

கொலை, கொள்ளை, வன்புணர்வு என ஒரு பெரும் குற்றப்பட்டியல் வடக்கில் நடந்த வண்ணமுள்ளது.

எனினும் இது தொடர்பில் யாரேனும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. அதிலும் குறிப்பாக இத்தகைய குற்றச்செயல்கள் குறித்துப் பொலிஸாரின் நடவடிக்கை என்ன?

இத்தகைய சம்பவங்களைத் தடுக்கப் பொலிஸார் மேற்கொண்டுள்ள உபாயம் யாது? என்பன பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

எனினும் சந்தேகநபர்கள் கைது என்பதோடு எல்லாம் முடிந்து விடுகிறது.

இவ்வாறான நிலைமையில் வடபுலத்தில் இருக்கக்கூடிய தமிழ் மக்கள் இடப்பெயர்வு பற்றிச் சிந்திக்கத் தலைப்படுவர்.

அதிலும் குறிப்பாக புத்திசாலிகள் இங்கிருந்து வெளியேறுவதற்கான ஆயத்தங்களை செய்வதில் முன்னிற்பர்.

ஆக, வடபகுதியில் குழப்பங்களை ஏற்படுத்தி க்களை வெளியேற்றுகின்ற திட்டம் மிகக் கச்சிதமாக நடந்தேறுகிறது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

ஆம், மருதங்கேணியில் யானை கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி அம்பாள்புரத்துக்கு சிறுத்தை ஏதோவொரு வகையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்குச் சான்றாக மலையகத்தின் சமகால நிலைமையை எடுத்தியம்ப முடியும். அதாவது மலையகத் தமிழ் மக்கள் வாழுகின்ற தேயிலைத் தோட்டப்பகுதிகளில் சிறுத்தைகள் விடப்பட்டுள்ளன.

முன்பு சிறுத்தைகள் இல்லாத இடத்தில் திடீரென சிறுத்தைகள் வந்தது எங்ஙனம் என்ற கேள்வியினூடு சிறுத்தைகளை யாரோ கொண்டு வந்து விட்டுள்ளார்கள் என்ற உண்மையை உணரமுடியும்.

இவ்வாறான சம்பவங்கள் வடபகுதியிலும் நடக்கிறது என்ற உண்மைகளோடு இதன் பின்னணியில்தான் வாள்வெட்டுச் சம்பவங்களும் நடந்தேறுகின்றன என்று அனுமானிப்பதில் தவறு இருப்பதாக நாம் கருதவில்லை.

எனவே தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற மிகமோசமான – அநாகரிகமான – மனிதாபிமானமற்ற செயல்களை கண்காணிப்பது, கண்டறிவது என்ற விடயத்தில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

இல்லையேல் எதிர்காலம் இன்னும் மோசமானதாக இருக்கும் என்பதை தமிழ்த் தரப்புகள் அனைத்தும் உணர்ந்து கொள்வது அவசியம்.

# வவுனியாவில் கர்ப்பிணி பெண் மீது நிதி நிறுவன ஊழியர் தாக்குதல்

## பெண் வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா ஹொறவப் பொத்தானை வீதி இலுப்பையடி சந்திக்கு அருகே நேற்று முன்தினம் நிதி நிறுவன ஊழியரொருவர் கர்ப்பிணி பெண் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதனையடுத்து கர்ப்பிணிப பெண் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வவுனியா மில் வீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனத்தில் நபரொருவர் வாகனத்திற்கு லீசிங் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று மாதங்களாக மாதாந்த லீசிங் பணத்தினை செலுத்தவில்லை. அதனையடுத்து வாகனத்தினை பறிமுதல் செய்வதற்கு அனுமதியினை பெற்றதாக நான்கு நபர்கள் சென்றுள்ளனர்.

குறித்த வாகனத்தின் உரிமையாளர் நேற்று முன்தினமாலைவவுனியாஹொறவப் பொத்தானை வீதி இலுப்பையடி சந்திக்கு அருகே வீதியில் வாகனத்தினை தரித்து விட்டு வர்த்தக நிலையத்திற்கு பொருட்களை கொள்வனவு செய்ய சென்றுள்ளார். இதன் போது வாகனத்தினுள் அவரது மனைவியும் (7 மாத கர்ப்பிணி). அவரது உறவினர்களும் (பெண்கள்) இருந்துள்ளனர்.

இதன் போது திடீரென நிதி நிறுவனத்தின் வாகனத்தினை பறிமுதல் செய்யும் ஊழியர் வாகனத்தில் சாரதியின் ஆசனத்தில் ஏறி அமர்ந்துள்ளார்.

திடீரென நபரொருவர் வாகனத்தில் ஏறியதனால, பதற்றமடைந்த வாகனத்தின் முன்பக்கத்தில் சாரதி ஆசனத்திற்கு அருகேயிருந்த வாகன உரிமையாளரின் மனைவி (7 மாத கர்ப்பிணி) இனந்தெரியாத நபர்களின் அத்துமீறலால் வாகனத்தின் திறப்பினை எடுப்பதற்கு முயன்றுள்ளார்.

இதன்போது கர்ப்பிணிப் பெண் மீது நிதி நிறுவனத்தின ஊழியர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளாகிய கர்ப்பிணி பெண் சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக வ்வுனியா பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் வவுனியா மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்தவில்லுவராட்சியின் பணிப்பின் பேரில் குறித்த நிதி நிறுவனத்தில் வாகனத்தினை பறிமுதல் செய்யும் ஊழியர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக வாகனத்தின் உரிமையாளர் கருத்து தெரிவிக்கையில்,

நான் வாகனத்தின் லீசிங்கிற்கு உரிய பணத்தினை காசோலையாக வழங்கினேன்.

பின்னர் காசோலையில் காசு என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவ்விடத்தில் அவர்களது அலுவலகத்தின் பெயர் குறிப்பிட வேண்டுமென குறிப்பிட்டதோடு குறித்த காசோலையை ஏற்றுக்கொள்ள காலம் கடந்துவிட்டது என தெரிவித்தே எனது வாகனத்தினை பறிமுதல் செய்துள்ளனர்.

இருப்பினும் காசோலை மாற்றம் செய்யப்பட்டு நிதி நிறுவனத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. காசோலை மற்றும் பணம் ஆகியவற்றை செலுத்தியதோடு வாகனத்தை நிதி நிறுவனத்தில் ஒப்படைத்து விட்டு மீதமுள்ள பணத்தை செலுத்தி விட்டு வாகனத்தை மீளப்பெறுவதாகவும் கூறியுள்ளார்.

அதற்கு நிதி நிறுவன முகாமையாளர் வாகனத்துக்கு எந்த சேதமும் வராது என உறுதி அளித்ததாகவும் தெரிவித்தார். இவ்விடயத்தினை விட எனது மனைவி 7 மாத கர்ப்பிணி. அவர் மீது நிதி நிறுவன ஊழியர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

எனது மனைவிக்கு ஏதேனும் நடந்தால் யார் பொறுப்பு கூறுவர். எனவே இவ் விடயத்தில் எனது மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பாக பொலிஸார் நீதியான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.

மில் வீதியில் அமைந்துள்ள குறித்த நிதி நிறுவனத்தின் ஊழியர் மீது இவ்வாறான பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-281)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அபிஷேக பொருட்களும் அதன் பலன்களும்**

தண்ணீர் - மனசாந்தி
நல்லெண்ணெய் - பக்தி
சந்தனாதி தைலம் - சுகம்
வாசனை திரவியம் - ஆயுள் வலிமை
மஞ்சள் பொடி - ராஜ வசியம்
நெய் - மோட்சம்
பஞ்சாமிர்தம் - தீர்க்காயுள்
தேன் - இசை(அ)சங்கீத வலிமை
வாழைப்பழம் - பயிர்விருத்தி
மாம்பழம் - சகல வசியம்
பலாப்பழம் - உலக வசியம்
திராட்சைப் பழம் - பயம் நீங்குதல்
மாதுளம்பழம் - பகை நீங்குதல்

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

கிழக்கு, ஊவா, மத்திய, வடக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் இன்று முதல் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாகவானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும் என்பதோடு வேகமாக காற்று வீசும் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பொதுமக்கள்மறறும் மீனவர்களை மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறும் வானிலை அவதான நிலையம்அறிவித்துள்ளது.(மு)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ்.பிரதேசத்தில் புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, வாதரவத்தை, ஊரணி, வீரவாணி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில மலையா பருத்திக்குளம் கிராமம், அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில மடுச் சந்தியிலிருந்து பூமலர்ந்தான் வரை ஆகிய பிரதேசத்திலும் மின் தடைப்படும். (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கலாசாரம்



நம்மொழியில் "கலாசாரம்" (Culture) என்ற வார்த்தை இருக்கிறதே அது "கலை" "ஆச்சாரம்" என்ற இரண்டு சொற்கள் இணைந்து உருவான கூட்டுச்சொல் (Compound-word). இதில் "கலை" என்ற வார்த்தை எப்படி வந்தது என்றால் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அறிவின் நுட்பத்தினாலே, கைத்தினாலேயே உருமாற்றி, அழகுபடுத்தி நாம் துய்க்கிறோம் பாருங்கள். அதுதான் கலை.

ஆக மனிதன் வாழ்வே கலைதான். அப்படி இந்தக் கலையின் காரணமாக விளைவு தனக்கோ, பிறர்க்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவுக்கோ, உடல் உணர்ச்சிகளுக்கோ துன்பம் எழாது விழிப்போடு இருந்து கொண்டு, அளவோடு, முறையோடு கலையை நாம் பழகி வந்தோமானால், அந்த நெறியின் பெயரே "ஆச்சாரம்" துன்பம் எழாமல் காக்கக் கூடிய ஒரு நெறி, ஒரு முறை, ஒரு அளவு, இது எல்லாம் பார்த்தோமானால், அதன் பெயர் ஆச்சாரம் என்று சொல்லுவார்கள். அதனால் கலை + ஆச்சாரம் = கலாசாரம் என்றானது.

ஆங்கிலேயர்கள் நமது நாட்டுக்கு வந்த போது பார்த்தார்கள் நல்ல அழகான சொல்லாக இருக்கிறது, நாமும் உச்சரிக்கலாம் என்று எடுத்தவர்கள், இடையிலேயுள்ள நெடிலை விட்டுவிட்டு "Culture" என்று தங்கள் அகராதிக்கு [illegible] வைத்துக் கொண்டு பார்த்தோமானால் எப்பொழுதுமே இயற்கை [illegible] அறிவினாலோ, கைத்திறனாலோ, உருமாற்றி அழகுபடுத்தியே துய்த்து வாழக் கூடியவர்களாகவே நாம் இருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இனத்தை அவலங்களிலிருந்து மீட்டு இலக்கை நோக்கி வழிநடத்த என்னால் முடியும்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



எமது இளைஞர்களுக்கு சமூக ரீதியாகவே அன்றி அரசியல் ரீதியாகவோ சரியான வழியைக் காட்ட இளைஞர் அமைப்புகள் முன்வர வேண்டும். அவ்வாறு சரியான பங்களிப்பு இருக்குமாக இருந்தால் நிச்சயமாக எமது இனத்தை அவலங்களிலிருந்தும் துயரங்களிலிருந்தும் மீட்டு சரியான இலக்கை நோக்கி வழிநடத்திச் செல்ல என்னால் முடியும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த விளையாட்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் -

இளைஞர்களுக்கு நல்வழி காட்டும் போர்வையில் அவர்களுக்கு உணர்ச்சிகளை ஊட்டுவதனூடாகவும் சுயலாபங்களுக்காக அவர்களை தவறாக வழிநடத்துவதாலுமே எமது சமூகம் சீரழிந்துகொண்டு போகின்றது. இது நிச்சயம் எமது இனத்தை மீண்டுமொரு அழிவுக்கே கொண்டுசெல்ல வழிவகுக்கும்.

அத்தகைய தவறான போக்கில் எமது இளைஞர்களை செல்லவிடாது சரியான வழி நோக்கி வழிநடத்திச் செல்ல இத்தகைய கழகங்கள் முன்னின்று உழைக்கவேண்டும்.

கடந்த காலங்களிலும் சரி இன்றும் சரி நாம் எமது இனத்தின் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் சிதைவடைந்துவிடாது பாதுகா ப் பதிலும் எமது இளம் சமூகத்தினரது ஆற்றல்களை ஊக்குவித்து அவர்களை ஒளிமயமான ஒரு நிலைக்கு கொண்டு செல்வதற்காகவும் அயராது உழைத்து வந்திருக்கின்றோம்.

அந்தவகையில் எமது இளைஞர்களுக்கு சமூக ரீதியாகவே அன்றி அரசியல் ரீதியாகவோ சரியான வழியைக் காட்ட இவ்வாறான இளைஞர் அமைப்புகள் எம்முடன் இணைந்து சரியான பங்களிப்பை தருவார்களாக இருந்தால் நிச்சயமாக எமது இளைஞர் சமூகத்திற்கு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது. இதை செய்து முடிக்கின்ற ஆற்றலும் அக்கறையும் மட்டுமல்லாது தற்துணிவும் எம்மிடம் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# வடக்கு- கிழக்கு பிறிமியர் லீக் தமிழ் யுனைட்டட் அணிவெற்றி



வடக்கு கிழக்கு மாகாண வீரர்களை ஒன்றிணைத்து நடத்தப்படும் வடக்கு, கிழக்கு பிறிமியர் லீக்கின், மூன்றாவது லீக் சுற்று ஆட்டங்கள் தற்போது யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் முதல் லீக் போட்டியில் 19 ஆவது போட்டியில் தமிழ் யுனைட்டட் அணியை எதிர்த்து ரிங்கோ ரைரன்ஸ் அணி மோதியது. முதற்பாதியாட்டத்தில் தமிழ் யுனைட்டட் அணி முதலாவது கோலை அடித்தது. சிறிது நேரத்தில் ரிங்கோ ரைரன்ஸ் அணி பதில் கோலைப் போட்டது.

முதற்பாதி யாட்டம் 1:1 என சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் தமிழ் யுனைட்டட் அணி, மேலும் ஒரு கோலை அடித்து, தமது வெற்றியை உறுதி செய்தது.

தமிழ் யுனைட்டட் அணி சார்பாக இரண்டு கோ[illegible]களை அடித்த ஜெகன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# அணித்தலைவி சானு சிறப்பாட்டம் மகாஜனாக் கல்லூரி சம்பியன்






வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது.

இதில் 20 வயதுப் பெண்களுக்கான மென்பந்தாட்ட துடுப்பாட்ட போட்டிகள் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணியும், அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலய அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மகாஜனா அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. அதற்கிணங்க களமிறங்கிய சதாசிவம் மகா வித்தியாலய அணி, 6 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றது.

39 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய மகாஜனாக் கல்லூரி அணி, 5.5 ஓவர்களில் 1 விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

மென்பந்தாட்ட துடுப்பாட்ட போட்டியில் சிறந்த வீராங்கனையாக மகாஜனாக் கல்லூரியின் அணித் தலைவி பா.சாணு. (க-26)






சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கூமாங்குளம் நண்பர்களும் இணைந்து நடத்திய அமரர் சின்னராசா சுதர்சன் சூசை அவர்களின் 11 வது ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் கூமாங்குளம் நண்பர்களும் இணைந்து நடத்திய அமரர் சின்னராசா சுதர்சன் சூசை அவர்களின் 11 வது ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண இறுதிப்போட்டி சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக தலைவர் து.தியாகச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது பைவ் ஸ்ரார் விளையாட்டுகழகம் எதிர் ஜு2மு விளையாட்க்கழக அணிகளுக்கிடையே 24.06.2018 அன்று எமது கழக மைதானத்தில் இடம் பெற்றது ஜு2மு விளையாட்டுக்கழகம் 08பந்துப்பரிமாற்ற நிறைவின் போது 07 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பைவ் ஸ்ரார் விளையாட்டுகழக அணியினர் 7.5 பந்துகளில் 05 இலக்குகளால் வெற்றி பெற்னர் இவர்களுக்கான வெற்றி கிண்ணங்களை திரு . கா.உதயராசா (பிரதேச செயலாளர் வவுனியா )





2018ஆம் ஆண்டிற்கான பாடசாலைகளுக்கிடையிலான கராத்தேப் போட்டிகள் கடந்த 24, 25ஆம் திகதிகளில் தெல்லிப்பழை மத்தியக்கல்லூரி உள்;ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் விஜயராஜ் நிவேதன் 16 வயதிற்குட்பட்ட பிரிவில் குமித்தே, காட்டா, குழுக்குமித்தே, குழக்காட்டா ஆகிய போட்டிகளில் தங்கம் வென்றுள்ளார். 20 வயதிற்குட்பட்டவர்களுக்கான போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அருள்ஜோதீஸ்வரன் தனுஜன் காட்ட, குமித்தே, குழுக்காட்டா, குழுக் குமித்தே ஆகிய போட்டிகளில் வெற்றி தங்கபதக்கத்தை பெற்றுள்ளனா. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிராந்திய விமான...

பங்கேற்பார்.

பலாலி விமான நிலையத்தை இந்தியா வின் உதவியுடன், பிராந்திய விமான நிலை யமாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக, எதிர்வரும் ஜூலை 10ஆம் திகதி, நேரில் வந்து ஆராய்வதாகவே தமிழ்த் தேசிய கூட்ட மைப்பிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கெனவே உறுதியளித்திருந்தார்.

இதேவேளை, அலரி மாளிகையில் கட ந்த 27ஆம் திகதி நடந்த வடக்கு அபிவிருத்தி தொடர்பான சிறப்புக் கூட்டத்தில், பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்துவது, அதற்குத் தேவையான காணிகள் தவிர்ந்த, அதனை அண்டிய ஏனைய காணிகளை விடுவிப்பது தொடர்பாக பிரதமரால், தமிழ்த் தேசிய கூட்ட மைப்பிடம் உறுதியளிக்கப்பட்டது.

மேலும் பலாலி விமான நிலையத்தை பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பில் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி தாம் யாழ்ப்பாணம் வரும் போது, இந்தியத் தூதுவர், அங்கு வருவார் என்றும், இருவரும் இணைந்து, பலாலி விமான நிலையத்தை நேரில் பார்வையிட்டு, அதனை அபிவிருத்தி செய்வது குறித்த திட்டங்களை உறுதி செய்வதாகவும் பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க கூட்டமைப்பு நாடாளுமன்ற உறு ப்பினர்களிடம் உறுதியளித்திருந்தார்.

இதற்கமைய பலாலி விமான நிலை யத்தை பிராந்திய விமான நிலையமாக அபி விருத்தி செய்து சிவில் விமான போக்குவர த்து பிரிவிடம் கையளிப்பதே பிரதமரின் நோக்கம் என குறித்த அலுவலகம் தெரிவி த்துள்ளது. (மு)

## கொல்லப்பட்டு எரிக்க...

பிலவினை சேர்ந்த இருவரை பொலி ஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்கள்.

இந்த நிலையில் சந்தேகநபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையினை அடு த்து குறித்த நபர் கொலைசெய்யப்பட்டு எரிக்க ப்பட்டமை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டி ருந்த நிலையில் நேற்று மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கைதான இருவரிடமும் மேலதிக விசார ணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸாரும் நெடுங்கேணிப் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (மு-281)

## அரசியல் தீர்வுக்கு...

தீர்வினை பெற்றுக் கொடுக்க லங்கா சமசமா ஜக் கட்சி பூரண ஒத்துழைப்பினை வழங்கும் என அக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடு கையில்,

நாடு என்ற வகையில் இலங்கை ஒன்று பட்டு காணப்பட்டாலும் இனங்கள் என்ற ரீதி யில் வேறுபட்டே காணப்படுகின்றது. குறிப் பாக வடகிழக்கில் பெரும்பாலும் தமிழ் மக் களே வாழ்கின்றனர். அவர்களின் நோக்கங் களும் அரசியல் செல்வாக்கும் மாறுபட்டதா கவே காணப்படுகின்றது.

இந் நிலையில் வடகிழக்கில் மாகாண சபைகளில் 13ஆவது திருத்தத்தின் அதிகா ரப் பகிர்வு முழுமையாக அமுல்படுத்தப்பட் டால் அது எதிர்காலத்தில் பாரிய அரசியல் மற்றும் சமூக பிரச்சினையை தோற்றுவிக்கும்.

ஆகவே தமிழ் மக்களுக்கு அரசியல் தீர் வினை பெற்றுக் கொடுக்க வேண்டியது 1978 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ் வொரு தலைவர்களினதும் பொறுப்பாக காணப்படுகின்றது. இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இவ்விட யத்தில் அதிகமாகவே பொறுப்பு காணப்படுகி ன்றது.

எனவே 2020ஆம் ஆண்டு ஆட்சிமாற்ற த்தின் பின்னர் 13ஆவது திருத்தத்தில் புதிய விடயங்களை உட்புகுத்தி கால தேவைகளு க்கேற்ப மாற்றங்களை ஏற்படுத்தி நாட்டை பிள வடையச் செய்யாமல், அனைத்து மக்களை யும் திருப்திப்படுத்தும் வகையில் தமிழ் மக்க ளுக்கான அரசியல் தீர்வினை பெற்றுக் கொடுக்க லங்கா சமசமாஜக் கட்சி பூரண ஒத் துழைப்பினை வழங்கும் என்றார். (மு)

## வடக்கில் குற்றங்கள்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்திலேயே மேற்குறித்த கோரிக்கையை முன்வைத்து ள்ளார்.

மேலும் குறித்த கடிதத்தில் குறிப்பிடு கையில்,

குற்றவியல் நடவடிக்கைகளை நிறுத்துவ தற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மாகாண அரச அலுவலர்களை உள்ளட க்கிய குழுவிடம் இருந்து உடனடி அறிக்கை ஒன்றை பெறுமாறும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

வடக்கில் குற்றவியல் நடவடிக்கைகள் திடீரென அதிகரித்துள்ளன. வன்முறையை யும் போதைப்பொருள் பாவனையையும் நிறு த்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் கடமையில் இருக்கும் சிரே ஷ்ட உப பொலிஸ் அதிபர் ஒருவரையோ அல் லது இளைப்பாறிய சிரேஷ்ட உப பொலிஸ் அதிபர் ஒருவரினது தலைமையிலோ வட மாகாண சபையின் அலுவலர்களையும் உள்ளடக்கி மேற்படி வன்முறை, போதைப் பொருள் விநியோகம், அவற்றின் பாவனை மற்றும் மண் கடத்தல் போன்ற குற்றவியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராய்ந்து அவற்றைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி உடனடி அறிக்கை ஒன்றைப் பெறுமாறு கேட்டுள்ளார்.

மேலும் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த போது அரசியல் கைதி ஆனந்த சுதா கரனுக்கு மன்னிப்பு வழங்க முடியாது இரு ப்பதைப்பற்றி ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அப்படியானால் அவரின் குழந்தைகள் வாழும் பிரதேசத்திற்கு அண்மையில் உள்ள சிறைச் சாலைக்கு கைதியை மாற்றினால் தாய் இல் லாத குழந்தைகள் தமது தந்தையைச் சென்று கண்டுவர முடியும் என்று முதலமைச்சரால் கூறப்பட்டதை வரவேற்று அதற்குரிய நட வடிக்கையை உடனே எடுப்பதாக ஜனாதிபதி அவர்கள் உறுதி மொழி அளித்திருந்தார். அதனை மீண்டும் நினைவுபடுத்தி உரிய நட வடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

அத்துடன் முதலமைச்சர் நிதியத்தின் நியதிச்சட்ட வரைவு இன்னமும் அனுமதி க்கப்படவில்லை என்றும் 5 வருடங்களாக அதுபற்றிக் கோரியும் இன்னமும் தாமதிப்பது எமது வடமாகாண பொருளாதார விருத்தியை அரசாங்கமானது விரும்பவில்லையோ என்று எண்ண வைக்கின்றது எனவும் அக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (மு-9)

## ஜனாதிபதித் தேர்தலின்...

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் அல் லது பொதுத்தேர்தல் ஆகியவற்றை நடத்திய பின்னர் மாகாணசபை தேர்தல்களை நட த்தக்கூடிய சாத்தியங்களே உள்ளதாக அரசா ங்க தரப்பில் இருந்து தகவல்கள் வெளியாகி யுள்ளது.

இதற்கிடையில் மாகாணசபை தேர்தல் களை உரிய காலத்தில் நடத்தியே தீரவேண் டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மாகாணசபை தேர்தல் களை உரிய காலத்தில் நடத்தாதுபோனால் தாம் பதவிவிலகப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(மு)

## கிளிநொச்சியில்...

மின்னல் தாக்குதலுக்கு இலக்கான குறி த்த நபர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தர்மபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வய துடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.(மு)

## தரம் 1க்கு...

எப்படும் என்று கல்வியமைச்சு தெரிவி த் துள்ளது.

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் பணி கடந்த 30ஆம் திகதி நிறைவடையவிருந்தது.

இருப்பினும் சமீபத்தில் இடம்பெற்ற தபால் ஊழியர்களின் பகிஷ்கரிப்பு காரண மாக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதியை கல்வியமைச்சு நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு)

# வடக்கு இளைஞர்களை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் குறிப்பிட்ட சிலர் ஈடுபட்டு வருகின்றனர்

## வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு இளைஞர்களை சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளில் இட்டுச்சென்று அவர்களை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் குறிப்பிட்ட சிலர் ஈடுபட்டு வருவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நேற்று ஞாயி ற்றுக்கிழமை திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ் வொன்றில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

இன்றைய காலசூழ்நிலையில் இளை ஞர்கள் யுவதிகள் பற்றிய முறையான வழி காட்டல்களும் நல்வழிப்படுத்துதலும் மிக அவசியமாக உணரப்பட்டுள்ளன.

இளவயதுப் பிள்ளைகள் முக்கியமாக இளைஞர்கள் சுயமாக சிந்திப்பதைத் தடுக் கும் நோக்கில் வேண்டுமென்றே நன்கு திட்ட மிடப்பட்டு அவர்களை அழித்தொழிக்கும் செயற்பாடுகளில் குறிப்பிட்ட பகுதியினர் செய ற்பட்டுவருகின்றார்கள்.

இளைஞர்களின் சிந்தனைகளை தீய வழிகளிலும் நவீன கலாசாரம் என பறை லும் வர்ணிக்கப்படுகின்ற சட்டத்திற்குப் புறம் பான நடவடிக்கைகளிலும் இட்டுச்செல்வதை நாங்கள் நிறுத்த வேண்டும்.

வீண் பணவிரயங்களில் எமது இளைஞ ர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். சுயமாக உழைத்துப் பணம் ஈட்டாமல் யாரோ அனு ப்பு வதை வைத்து பந்தா காட்டுகின்றார்கள்.

நவீன கையடக்கத் தொலைபேசிகளினூ டாக வலைத்தளங்களுக்குள் உள்ளீர்க்கப்ப ட்டு தமது நேரத்தையும் மனதையும் பறி கொடுத்து நிற்கின்றார்கள்.

இளைஞர்களின் உயிர்க்கொல்லியாக நவீனரக மோட்டார் சைக்கிள்கள் மாறியுள் ளன. சமூக கலாசார பிறழ்வுகளில் ஈடுபட தூண்டுகின்ற வகையில் சூழலானது எமது இளைய சமுதாயத்தைப் பாதித்து வருகின் றது.

இக் காலகட்டத்தில் திக்கம் சனசமூக நிலையம் தமது பகுதியில் உள்ள இளைஞ ர்களின் முன்னேற்றத்திற்காக கடுமையாக உழைப்பதும் இவ் இளைஞர் யுவதிகளை சீரிய வழியில் சிந்திக்க வைப்பதற்கு மொழி பற்றிய அறிவு விருத்தி மற்றும் இலக்கண இலக்கியங்களில் இயல்பாகவே ஆர்வத் தைத் தூண்டக்கூடியதான நிகழ்ச்சி முன்னெ டுப்புக்களில் ஈடுபட்டிருப்பது என்பன உண்மை யிலேயே மிகவும் பாராட்டிற்குரியது என முத லமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (மு)

# அராலி அராஜகத்துக்கு திரிலோகநாதன் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை அராலிப் பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நுழைந்த திருடர்கள் கணவனைக்கட்டி வைத்து விட்டு மனைவியை கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்குட்படு த்தியமை தொடர்பில் தமது ஆழ்ந்த அனுதா பங்களையும், கண்டனத்தையும் தெரிவிப்ப தாக வலிமேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் வட்டுக்கோட்டைத் தொகுதிப் பொறுப்பாளருமாகிய ந.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வலம்புரிக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்து ள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த விடயம் தொடர்பில் நாம் கடுமை யான கண்டனத்தை தெரிவிப்பதாகவும் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்கு மக் கள் முன்வர வேண்டும் எனவும் குற்றவாளி களை உடனடியாக இனங்கண்டு கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறிய அவர், பெண்கள் மீதான இவ்வா றான பாலியல் நடவடிக்கைகளை அரசு பாரா முகமாக இருப்பதாகவும் குற்றம் சுமத்தியு ள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் மக்கள் விழி ப்புடன் இருந்தால் இதனை தடுக்கலாம் எனவும் கூறியுள்ளதுடன் இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் மற்றும் சிறுவர் மகளிர் விவகார அமைச்சரிடமும் முறையிடவுள்ள தாகவும் குறிப்பிட்டுள்ளார். (மு)

## முதலமைச்சரை...

வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சரை கௌரவமாக பதவி விலக வேண்டும் என்று தெரிவித்திரு க்கிறார். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் தான் எப்போதோ தனது பதவியிலிருந்து கௌரவ மாக விலகியிருக்க வேண்டியவர். அவர் அவ்வாறு விலகியிருப்பாராக இருந்தால் இப் போது முதலமைச்சரை விலகச்சொல்வது நியாயமானதாக இருந்திருக்கும்.

பல சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என் றும், விலக்க வேண்டும் என்றும் அவரை, அவரது கட்சியே பல கோரிக்கைகளை எழு த்து மூலமாகவே விடுத்த போதிலும் அவர் அந்த பதவியிலேயே இருப்பேன் என கங்க ணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்.

தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக பார்க்கப்படும் முதலமைச்சர் விக்னேஸ்வ ரனை பதவியில் இருந்து விலகக் கூறுவது ஒரு கேலிக்கூத்தாகவே பார்க்கப்படுகின்றது.

இதனிடையே டெனீஸ்வரனுக்கு வழங்கப பட்ட தீர்ப்பின் ஊடாக மாகாண சபையினு டைய அதிகாரங்கள் தொடர்பாக அறிந்து கொள் ளக்கூடியதாக இருக்கின்றது. இந்த தீர்ப்பா னது வட மாகாணசபையின் முதலமைச்சரு க்கோ, அமைச்சர்களுக்கோ அல்லது உறு ப்பினர்களுக்கோ எந்த அதிகாரமும் இல்லை என்பதையே வெளிப்படுத்துகின்றது என்று அவர் தெரிவித்தார். (மு)

## யாழ்.வாள்வெட்டு...

தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய முக் கிய சந்தேக நபர் ஒருவரின் வீடு ஒன்றிற்குள் புகுந்து குறித்த இருவரும் தாக்குதல் மேற் கொண்டமை காரணமாகவே கைது செய்ய ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், சந்தேக நபர் ஒருவரின் மோட் டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு)

## மின்சார சபை...

லாளர் உபாலி மாரசிங்க தெரிவித்துள் ளார்.

இந்த நிலையில் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை முன்னெடுத்துச் செல்வது சிரம மாக காணப்படுவதாகவும் அவர் கூறியுள் ளார். (மு)

## சீனாவிடம் கடன்...

வும், இந்த நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில ஜனநாயகத்தை மட்டு மல்ல முழு நாட்டையே அழித்துள்ள தாகவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்து ள்ளார். (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவிடம் கடன் பெற்றமை...

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தளை பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆட்சி மீண்டும் தோற்றம பெற்றால்தற்போதைய ஜனநாயகம் அழிக்கப்படும் என்று சிலர் குற்றச்சாட்டுக்களை சாட்டி வருகின்றனர்.

1948 ஆம் ஆண்டு தொடக்கம் எந்த தலைவர்களும் நாட்டில் உறுதியான ஜனநாயகத்தினை தோற்றுவிக்கவில்லை.

30 வருட காலமாக இடம் பெற்ற பயங்கரவாதத்தினை முற்றாக அழித்து நாட்டை ஒன்றுபடுத்தியவர் மீண்டும் அந்த கொடிய யுகத்தினை ஏற்படுத்த மாட்டார் என்ற விடயம் யாவரும் அறிந்ததே.

இந் நிலையில் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கடன் நிறுவனாங் களிடமிருந்து கடன் பெறாமல் சீனாவிடமிருந்து கடன் பெற்றமை ஒரு இராஜதந்திரமே. ஏனெனில் அரசாங்கம் ஒரு குறித்த நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றால் அழுத்தங்களின் மத்தியிலே அரசாங்கத்தை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

இதன் காரணமாகதான் தேசிய அரசாங்கம் இன்று சர்வதேச கடன் நிறுவனங்களிடமிருந்தது கடன் பெற்று பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொணடு வருகின்றது என்றார்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம ஆட்சிப்பொறுப்பை ஏற்று மூன்று வருடத்துக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து. நாட்டில் ஜனநாயகத்தை நிலை நாட்டியதாக 23☛

## பொல் பொட்...

யுள்ளது. ஹிட்லரின் மூத்த சகோதரர் என என்னை அழைக்கின்றனர். இந்த பொல் பொட்டின் இளைய சகோதரர்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்க ஊடகம நியூயோர்க்டைம்ஸ்வெளியிட்டுள்ள செய்தி ஒரு அரசியல் சூழ்ச்சியே எனறு தெரிவித்துள்ளார்.

2015 ஆம்ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைகளுக்காக 7.6 மில்லியன் டொலர் நிதியை சைனாஹாபர் நிறுவனத்திற்கு சொந்தமான தனியார் வங்கி கணக்கில் இருந்து பெற்றதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி நிறுவனம் கடந்த 25 ஆம திகதி ஒருகட்டுரையை வெளியிட்டிருந்தது.

இந்தசெய்திகுறித்து நேற்று மகிந்த ராஜபகஷ வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன், தான் சைனா ஹாபர் நிறுவனத்திடம் இருந்து 2015 ஆம்தேர்தலுக்கு பணம் பெறவில்லை எனவும், அச்செய்தி ஒரு அரசியல் சூழ்ச்சியே. அந்தவகையில் குறித்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் நான் நிராகரிக்கிறேன் என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இச்செய்திக்கு எதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டநடவடிக்கைகள் தொடர்பாக தனது சட்டத்தரணிகளிடம் சட்ட ஆலோசனைகளை பெற்றுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ரு)


## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

(C-3066)



DELIVERY IN 3-5 DAYS

UK- 550 */=Kg
கனடா-900 */=Kg
ஜேர்மனி- 700 */=Kg
நெதர்லாந்து-700 */=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)

● மானிப்பாய் ✆ 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## வாடகைக்கு

திருநெல்வேலி தபாற் பெட்டி சந்திக்கு அருகாமையில் 4 அறைகள் கொண்ட மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு. (4762)

தொடர்புகளுக்கு:- 077 9319 434

## விவசாய விஞ்ஞானம் -(08)

A/L -18 Batch

✷ முன்னோடிப் பரீட்சையும் வழிகாட்டல் செயலமர்வும்

➡ Part -I -07/07, -II -08/07 } பி.ப 1.00 மணி

➡ செயலமர்வு -14/07, -15/07 } பி.ப 1-4

075 423 7652 ஆசிரியர் DMI -Jaffna

## வீடு / காணி விற்பனைக்கு

HARI REAL ESTATE
A TRADITION OF TRUST

- முகமாலை A9 நெடுஞ்சாலையுடன் 09 ஏக்கர் கொண்ட இரு காணிகள் விற்பனைக்கு- நன்னீர் வளம் மற்றும் நீண்டகால முதலீட்டிற்குகந்தது.
- நாவற்குழி- கேரதீவு சாலைக்கு அண்மித்து 4 1/2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு- பயன்தரு இயற்கை வளங்கள் மற்றும் நன்னீர் வளம்.
- மல்லாகம் மத்தி (GS ஒழுங்கை), கே.கே.எஸ்.வீதியிலிருந்து 150 மீற்றர் உட்புறமாக 02 பரப்பு காணியுடன் புதிய வீடு சகல அடிப்படை வசதிகளுடன் விற்பனைக்கு- இணைந்த குளியலறை, நன்னீர் வளம் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் கொண்டது.
- கைதடி வடமாகாண சபை முன்பாக 250 மீற்றர் தூரத்தில் 04 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்கு.
- சுன்னாகம்- கச்சனார் வளவு 03 பரப்பு காணியில் புதிதாக அமைக்கப்பட்ட அழகிய வீடு அனைத்து வசதிகளுடனும் விற்பனைக்கு- இணைந்த குளியலறை, 04 அறைகள், நன்னீர் வளம் ஆகியவற்றுடன் சுத்தமான காற்றோட்டமிக்க பிரதேசம்.
- யாழ்.பிரதானவீதியில் 3600 சதுரஅடி விஸ்தீரணமுள்ள புதிதாக வடிவமைக்கப்பட்ட மாடிக் கட்டடம் நீண்டகால குத்தகைக்குண்டு. போதிய வாகனத் தரிப்பிட வசதி, 06 அறைகள், 04 இணைந்த குளியலறைகள், இருபக்க நுழைவுப்பாதை மற்றும் நிறைந்த காற்றோட்டமிக்க அமைவிடம், அலுவலகத் தேவை, தனியார் விநியோக நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் போன்றவற்றின் பாவனைக்கேற்றது.

அனைத்தும் மிகச்சிறந்த விலைப்பெறுமதிகளில்.

'ஹரி றியல் எஸ்டேட்'

இல. 10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி +94 021 221 4422
மொபைல் + 94 70 300 4000
முகநூல் harirealestate.lk

POWERED BY HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD

(C-3077)

## RAPID PICK TAXIES ENTERPRISE (PRIVATE) LIMITED

சகலருக்கும் சேவை - சகலருக்கும் வருவாய்

யாழ்ப்பாணத்தில் முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு பெண் வேலையாட்கள் தேவை.

நேர்முகத் தேர்வுகள் 03.07.2018 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி முதல் நடைபெறும்.

க.பொ.த சாதாரணதரம் (O/L)
க.பொ.த உயர்தரம் (A/L)

படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

சிவன் கோவிலடி,
378 (260) K.K.S வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 076 443 5299, 077 799 4445

(4733)


## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி தியாகராசா



சிறுப்பிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி தியாகராசா அவர்கள் நேற்று (01.07.2018) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் செல்லப்பா இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் தியாகராசாவின் அன்பு மனைவியும், ஞானகௌரி (ஆசிரியர் - யாழ்/சிறுப்பிட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை), ஞானசசி (ஆசிரியர் - யாழ்/சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம்), குணசீலி (கிராம அலுவலர் J-274) ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெகநாதனின் அன்பு மாமியாரும், சதுர்ஷிகா, சந்தோஷ் (யாழ்/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), தருணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை (02.07.2018) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் சிறுப்பிட்டி கொண்டதுளுக்கி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல் - குடும்பத்தினர் சிறுப்பிட்டி வடக்கு.** (4766)


## Techno World

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை-யாழ்.

A/L 2018

தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

இலவச விசேட செயலமர்வு

ஆரம்பம் 9.00 மணி முதல் 2.00 வரை

| திகதி | பாடங்கள் |
|---|---|
| 7,8 | பொறியியல் தொழில்நுட்பவியல்<br>உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 9,10 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 12,13,14 | I.C.T, விவசாயம்,புவியியல்,<br>ஊடகக்கல்வி |

குறிப்பு:-

- பாடங்கள் ஒவ்வொன்றும் அலகுரீதியாக தெளிவுபடுத்தப்படும்.
- எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய மாதிரி.
- வினாத்தாள்களும் அதற்குரிய விடைகளும் விளக்கங்களும் வழங்கப்படும்.
- முற்பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கே கையேடுகள் வழங்கப்படும்.
- முக்கிய பரீட்சை வினாத்தாள் செய்து விடப்படும்.

இன்றிலிருந்து முற்பதிவுகளை மேற்கொள்ளலாம்

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

(சி-3110) தொடர்புகளுக்கு 077 017 5346

## வடமாகாண முகாமைத்துவ உதவியாளர்

மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கான மாலை நேர வகுப்புக்கள்

ஆரம்பம் நாளை

செவ்வாய் (3/7)
பி.ப 5.00-7.00
செவ். புதன், வியாழன் மாலை வகுப்புக்கள் நடைபெறும்.

076 688 3394
D.M.I
(வெலிங்ரன் சந்தி)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை:
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (3076)

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576 | சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 | கிளிநொச்சியில் - இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு கிளிநொச்சி (தம்றோ காட்சி அருகில்) 076 443 1576 | ✆ 021 222 3536


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org